Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 29 வெள்ளிக்கிழமை (14.12.2012) பக்கங்கள் 20 ஓசை – 075

















# தடம்மாறுகிறது கூட்டமைப்பு தேசியவாதிகள் போர்க்கொடி



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் விடுதலைப் புலிகள் தொடர்பாக நாடாளுமன்றில் ஆற்றிய உரை தொடர்பாக தமிழ்த் தேசிய வாதிகளிடமிருந்து கூட்டமைப்புக்கு எதிராகக்கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்ட கூட்டமைப்பினர் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் அவர்களையும் அவர்களின் கொள்கைகளையும் உதறித்தள்ளிவிட்டு தமது சுயலாபங்களுக்காக செயற்பட்டுவருகின்றனர் என்றும் தமிழ்த் தேசியவாதிகள் கூட்டமைப்பு மீது கண்டனங்களை அள்ளி வீசுகின்றனர்.

அண்மைய மாதங்களாகக் கூட்டமைப்பினர் தடம்மாறிப் பயணிப்பதாகவும் தமது இருப்பை உறுதி செய்வதற்காகத் தமிழர் நலன்களுக்கு விரோதமாகச் செயற்பட்டு வருவதாகவும் அனைத்துத் தரப்பில் இருந்தும் எதிர்ப்புக்கள் கிளம்பியிருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்மந்தன் விடுதலைப் புலிகள் குறித்து நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை குறித்து கடும் கணடனங்கள் கிளம்பியுள்ளதாகத் 'திவயின' என்ற சிங்கள நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

தமிழ் அரசியல் கட்சிகள் மட்டுமன்றிப் புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர் அமைப்புக்கள் சிலவும் மேற்படி நாடாளுமன்ற உரை குறித்து

(19) ஆம் பக்கம் பார்க்க

## பல்கலை மாணவிகள் மூவர் மீது விசாரணை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவிகள் மூவருக்கு பயங்கரவாத் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இன்று இவர்களை யாழ்ப்பாணத்திலுள்ள பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு அலுவலகத்துக்கு வருமாறு கடிதம் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்ட மாணவிகளில் ஒருவர் யாழ். பல்கலைக்கழக மாணவிகள் விடுதியின

(19) ஆம் பக்கம் பார்க்க

## இளம்பெண் சடலமாக மீட்பு

(வடமராட்சி)

வடமராட்சி துன்னாலை அல்லையம்பதிப் பகுதியில் உடுப்புக்களைச் சலவை செய்துகொணடிருந்த குடும்பப் பெண்ணொருவர் நீர்த் தொட்டிக்குள் விழுந்து மரணமடைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சதீஸ்குமார் சுகந்தினி (வயது - 38) என்ற ஒரு பிள்ளையின் தாயாரே மரணமடைந்துள்ளார். சுமார் ஒரு மணிநேரமாக இவர் உடுப்புக்களைச் சலவை செய்து கொண்டிருந்ததாகவும் பின்னர் தொட்டிக்குள் வீழ்ந்த நிலையில் தலையில் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாக சடலம் மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சடலபரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (116)

## அமெரிக்க முதலீடுகளுக்கு இலங்கையில் அதிக வாய்ப்பு

(வோசிங்டன்)

இலங்கையில் அமெரிக்க முதலீடுகளை ஊக்குவிக்கும் முகமாக இலங்கை அரசுக்கும் அமெரிக்க காங்கிரஸின் மூத்த உறுப்பினர்களுக்கும் இடையில் முக்கிய பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருக்கிறது.

இப்பேச்சுக்களின் போது இலங்கை அரசின் சார்பில் அமெரிகாவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய பங்குபற்றினார்.


இப்பேச்சுக்களின் போது இலங்கைக்கு விஜயம் செய்து, உண்மையான நிலைமைகள் குறித்து புரிந்துகொள்ளுமாறு அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார். இலங்கையில் காணபபடும் சிறந்த சூழ்நிலை காரணமாக ஏற்கனவே பல அமெரிக்க நிறுவனங்கள் கொழும்பில் முதலீடுகளைச் செய்ய முன்வந்துள்ளதாகவும் அமெரிக் காவுக்கான இலங்கையின் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஆசியாவின் கடற்பாதுகாப்பு தொழில்சார் உத்திகள் என்ன?

### 29 நாடுகள் கொழும்பில் கூடி ஆராய்வு



(கொழும்பு)

கடற்பாதுகாப்புத் தொடர்பான தந்திரோபாயங்கள் குறித்து சர்வதேச நாடுகளின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று கொழும்பில் ஆரம்பமாகியது. இருபத்தொன்பது நாடுகளின் கடற்படை உயர் அதிகாரிகள் இந்த ஒன்றுகூடலில் கலந்துகொண்டு கடற் பாதுகாப்புச் சம்பந்தமான தொழில்சார் உத்திகளைப் பகிர்ந்து கொண்டனர்.

இலங்கைக் கடற்படை, தேசிய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த மேற்படி காலி சம்பாஷனை 2012 என்ற இந்த ஒன்றுகூடலின் ஆரம்ப நிகழ்வு நேற்று இடம் பெற்றது. கடல் பாதுகாப்பு தொடர்பில் மூன்றாவது தடவையாக காலியில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## நல்லூர் பிரதேச செயலர் வீதி விபத்தில் காயம்

நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் கல்வியங்காடு சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுத் திரும்பியதாகத் தெரியவருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு மேற்படி பகுதியில் அவர் பயணித்த வாகனம் விபத்தில் சிக்கியதாகவும் அந்த விபத்தில் தலையிலும் காலிலும் காயமடைந்த அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டதனை அடுத்து அவர் நேற்று வீடுதிரும்பியதாகவும் தெரியவருகின்றது. (பா)

## இணுவிலில் நேற்றிரவு ஆட்டோ சாரதி கடத்தல்

(யாழ்ப்பாணம்)

இணுவில் சந்தியில் வைத்து ஆட்டோ சாரதியொருவர் இனம்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார். நேற்று இரவு 9.00 மணியளவில் வெள்ளை வானில் அப்பகுதிக்குச் சென்ற இனம் தெரியாத சிலர் வீதியால் ஆட்டோவில் சென்றுகொண்டிருந்த மேற்படி இளைஞரை வழி மறித்து தமது வானில் ஏற்றி கடத்திச் சென்றுவிட்டனர். இதனால் நேற்று இணுவில் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## நாளைய தினமுரசில்...

### விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 12





கிளிநொச்சியில் நசீரை சந்தித்த சிவராம் பல்வேறு தகவல்களையும் குறித்த ஊடகவியலாளர் தொடர்பிலான பல்வேறு அம்பலமாகாத தகவல்களையும் வெளிப்படுத்தியதுடன் குறித்த ஊடகவியலாளரும் அவரது மைத்துனரான தற்போதைய கூட்டமைப்பின் பாராளுமன்ற

# வேகமாகப்பரவும் காய்ச்சல்; யாழில் ஒருவர் உயிரிழப்பு

## பலர் வைத்தியசாலைகளில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி வைத்தியசாலைகளில் ஒருவித வைரஸ் காய்ச்சலால் பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தற்போது நிலவும் கால நிலை மாற்றத்தால் பருவமழை பெய்வதும் வெய்யிலுமாக காணப்படுவதாலேயே இவ் வைரஸ் காய்ச்சல் பரவுவதாக வும், பலர் இக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

குறிப்பாக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் நாளாந்தம் 10 நோயாளர்கள் இவ் வைரஸ் காய்ச்சலால் விடுதியில் தங்கி நின்று சிகிச்சை பெறுவதாகவும், வெளிநோயாளர் பிரிவிலும் நாளாந்தம் அதிக எண்ணிக்கையான மக்கள் சிகிச்சை பெற்றுச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கோண்டாவிலைச் சேர்ந்த அந்தோனி ஜெனீஸ்வரன் (வயது 32) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவர்.

காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட இவர் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சையினைப் பெற்றுள்ளார். நேற்று முன்தினம் இரவு கடும் காய்ச்சல் ஏற்பட்டுள்ள நிலையில், இரவு 2.00 மணியளவில் உயிரிழந்த நிலையில் இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற மரண விசாரணையில், பெப்ரிசீமியா காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக அவரது உறவினர் ஒருவரால் தெரிவிக் கப்பட்டது. மரண விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(கே, இ)

# அபராதம் விதிப்பு

கிளிநொச்சிப் பகுதியில் சட்டத்திற்கு எதிரான முறையில் ஒழுங்குகளை மீறிச் செயற்பட்ட 3 நபர்களுக்கு கிளிநொச்சி நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கிளிநொச்சி ஏ-9 வீதியில் வீதி ஒழுங்குகளை மீறி வாகனம் செலுத்திச்சென்ற நபர் அதே வீதியில் டிப்பர் வாகனத்தை ஆபத்தான முறையில் செலுத்திச் சென்றது மட்டுமல்லாமல், பொலிஸார் மறித்தும் நிற்காமல் சென்ற நபர் மற்றும் கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இருந்தும் நிபந்தனைகளை மீறி மணல் ஏற்றிய நபர்கள் மூவரையும் கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

குறித்த வழக்கை விசாரணை செய்த கிளிநொச்சி மாவட்ட நீதிபதி எம.ஐ.பகாதீன் வீதி ஒழுங்கை பின்பற்றாத நபருக்கு 2 ஆயிரம் ரூபாவும், டிப்பர் வாகனத்தைச் செலுத்திய நபருக்கு 4 ஆயிரம் ரூபாவும், மணல் ஏற்றி நபருக்கு 10 ஆயிரம் ரூபாவும் செலுத்துமாறு உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார்.

(கே)

## முன்பள்ளியின் ஒளிவிழா

மாங்குளம் சிறுவர் நிகழ்ச்சித்திட்ட அமைப்பினால் சரத் ஜீவன் முன்பள்ளி ஒளிவிழா நாளை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக கரித்தாஸ்-கியூடெக் நிறுவன இயக்குநர், சிறப்பு விருந்தினராக மாங்குளம் புனித அக்கினோஸ் நேரியார் ஆலய பங்குத்தந்தை அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதன், மு/மாங்குளம் மகா வித்தியாலய அதிபர் பசுபதி ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(12)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் அனல் மின்நிலையம் ஜனவரி மாதம் இயக்கப்பட வேண்டிய கட்டாயம் இருப்பதால் அதன் பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்காக மின்தடை ஏற்படுத்த வேண்டிய தவிர்க்க முடியாத கட்டாயத்தில் உள்ளோம். க.பொ.த (சா.த) பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் இந்த மின்தடையானது மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் மிகுந்த அசௌகரியத்தைக் கொடுக்கும் என்பதை நாம் நன்கு அறிவோம். இதற்காக மிகவும் மனம்வருந்துவதுடன், உங்களது பரிபூரண ஒத்துழைப்பையும் இலங்கை மின்சார சபை கோருகின்றது.

பின்வரும் அட்டவணைப்படி மின் தடை ஏற்படுத்தப்படும்.

16.12.2012 - ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 வரையும்- மந்திகை, கிராமக்கோடு, தம்பசிட்டி, ஓராம் கட்டை சந்தி, சாரையடி, புலோலி, பருத்தித்துறை நகரப் பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக் கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, சுன்னாகம், இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக் கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம், பிரதான வீதி, குருநகர், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், பட்டணப்பகுதி, யாழ். மாநகரசபை பகுதி, உரும்பிராய், கோண்டாவில், சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், குப்பிளான், மயிலங்காடு, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களிலும் மின்தடைப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.




கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியின் ஆங்கில தின விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில், மாணவர்களின் கலை நிகழ்வையும், விருந்தினர்கள் உள்ளிட்ட பார்வையாளர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (77)

# ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் இருவர் கைது செய்யப்பட்டது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவிடம் நேற்று முறையிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த ஒருவரும், நேற்று முன்தினம் புத்தூர் கிழக்கு புத்தூரைச் சேர்ந்த 64 வயதுடைய ஒருவரும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டது தொடர்பாக முறையிடப்பட்டுள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி ரி.கனகராஜ் தெரிவித்தார்.

(இ)

## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



8 ஆவது அகவையில்




பெயர் : ர.லக்ஷயா,

முகவரி: 2 வட்டாரம்,

புங்குடுதீவு.

## பரிசளிப்பு விழா

(நெல்லியடி)

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு நெல்லியடி முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நெல்லியடி சனசமூக நிலையத்தின் தலைவர் சு.கிருஷ்ணராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி இ.நற்குணலிங்கம், சிறப்பு விருந்தினராக நெல்லியடி கிராம அலுவலர் யோ.சசிகாந்தன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(12)

## யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம்



### வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

மேற்படி கூட்டம் தலைவர் திரு.எ.இ.போல் ஜெயகாந்தன் தலைமையில் எதிர்வரும் 16.12.2012 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.றிம்மர் மண்டபத்தில் நடைபெற்று 2013 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறும்.

எமது அங்கத்துவமுள்ள ஆட்டோ உரிமையாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

நிர்வாகம்.

(R/090)

## 2 ஆம் ஆண்டு நினைவுகள்

அமரர் கதிரவேலு மோகனராஜா
(மோகன்) கொழும்பு

தோற்றம் 11.11.1956



மறைவு 14.12.2010

பாசமிகு மகனே

உம்மைப் பிரிந்து இரண்டாண்டுகளானாலும்
உம் நினைவுகள் எம்முடனே இதயத்தில்
இவ் வையகத்தை விட்டு எங்கு சென்றீர்
எம்மை நீர் பிரிந்தாலும் என்றும் எம்முடன்
நினைவில் இருப்பீர் எம் வாழ்வில்

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.

(R/089)

தாய், சகோதரர்கள்,
பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் மரமுந்திரிகைச் செய்கை ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற அசாதரண சூழ்நிலைகளால் விடுபட்ட மரமுந்திரிகைச் செய்கையை மீள ஆரம்பிக்கும் வகையில் இம்மாவட்ட விவசாயிகளுக்கு சகல உதவிகளும் பெற்றுத் தரப்படும் என சிறு ஏற்றுமதி பயிர் அபிவிருத்தி அமைச்சர் றெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்த அமைச்சர், இம் மாவட்டத்தில் மர முந்திரிகைச் செய்கையை மீள ஆரம்பிக்கும் வகையில் கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மரமுந்திரிகைச் செய்கைக்கான ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடமாகாணத்தில் மரமுந்திரிகை செய்கைக்கு ஏற்ற வளத்தைக் கொண்ட மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் விளங்குகின்றது.

கடந்த 30 வருடங்களாக இப்பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படாமல் இருந்தது. எனினும் இச்செய்கையை மீள ஆரம்பித்து விவசாயிகளுக்கு வருவாயைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் மரமுந்திரிகை செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதிக வருவாயை ஈட்டித் தரும் ஒரு பயிர்ச்செய்கையாக மரமுந்திரிகைச் செய்கை காணப்படுகிறது. அந்த வகையில் இம்மாவட்டத்தில் ஒரு ஏக்கருக்கு மரமுந்திரிகை செய்கை மூலம் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை வருவாயை ஈட்ட முடியும்.

அந்த வகையில் இச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு காணி தவிர்ந்த ஏனைய சகல வசதிகளும் மானிய அடிப்படையில் பெற்றுத் தரப்படும். இதன் மூலம் விவசாயிகள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும்.

அத்துடன் விவசாயிகள் இச்செய்கையை பழைய முறையில் மேற்கொள்ளாமல் நவீன முறையில் குறுகிய காலத்தில் பயன்தரக் கூடியவகையில் மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் 100 பயனாளிகளுக்கு இச்செய்கைக்கான உரம் உள்ளிட்ட சகல வசதிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இதில் அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (04)

## சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2012

உறுப்புரை - 12

எவரும் அவரது அந்தரங்கத்துவம், குடும்பம், வீடு அல்லது கடிதப் போக்குவரத்து என்பவை சம்பந்தமாக ஒருதலைப்பட்ட மனப் போக்கான தலையீட்டிற்கோ அல்லது அவரது மரியாதை, நன்மதிப்பு என்பனவற்றின் மீதான தாக்குதல்களுக்கோ உட்படுத்தப்படலாகாது. அத்தகைய தலையீட்டுக்கு அல்லது தாக்குதல்களுக்கெதிராக ஒவ்வொருவரும் சட்டப் பாதுகாப்புக்கு உரிமையுடையவராவர்.

# முஸ்லிம் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் - கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எம்.ஆர்.நிலாம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் முக்கிய அம்சமாக யாப்புத் திருத்தம், மீள்குடியேற்றம் மீளாய்வு, திட்டமிடல் ஆகியவை நிறைவேற்றுவதுடன் புதிய செயற்குழுவும் தெரிவு செய்யப்படவுள்ளது.

முஸ்லிம் சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகியுள்ள இக்காலப்பகுதியில் பல்வேறு சமூக விவகாரங்களில் காத்திரமான பங்களிப்புக்களை மேற்கொண்டுள்ளமை அறியக்கூடியதாகவுள்ளன.

தொடர்ந்தும் சமூக நலன் கருதி சமூகம் சார்ந்த அர்ப்பணிப்புக்களுடன் அங்கத்தவர்களின் பங்களிப்புகள் இக்கால கட்டத்தில் அவசியமென தெரிவிக்கப்பட்டுள்ளன.

வருடாந்த பொதுக் கூட்டத்தில் சகல அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

# வீண்விரயமாக்கப்படும் பேருந்து நிலைய நீர்

(வடமராட்சி)

பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் பயணிகளின் தேவைக்காக வைக்கப்படும் குடிநீர் அநாவசியமான முறையில் பயன்படுத்தப்படுவதாகவும், இதனால் நீர் வீண்விரயமாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேருந்து நிலையத்தில் தண்ணீர் தாங்கி மூலம் குடிநீர் வைக்கப்பட்டுள்ள நிலையில் இக்குடிநீர் மக்களால் குடிப்பதற்குத் தவிர முகம், கை, கால் கழுவுதல் போன்ற தேவைக்காகவும் பயன்படுத்தப்படுவதாகவும் இதனால் குடிநீர் விரைவாக தீர்ந்து விடுவதுடன் பின்னர் வரும் பயணிகள் தண்ணீர் இல்லாது கஷ்டப்படும் நிலையும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேருந்து நிலையத்திற்கு வரும் பயணிகள் குடிநீரை குடிப்பதற்கு மட்டும் பயன்படுத்தினால் ஏனைய பயணிகளும் தண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும், இது தொடர்பாக உரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (116)

# ஊர்காவற்றுறை நூலகத்தின் வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் கீழ் உள்ள பொது நூலகங்கள் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்திய போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பொது நூலகம் நடத்திய போட்டி முடிவுகள் வருமாறு,

கதை சொல்லல்

த.டிலோஜினா (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம்), ரி.விதுஷா (சரவணை சின்னமடு றோ.க.மகா வித்தியாலயம்), பு.சிறியாழினி (தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை).

பேச்சு

அ.றெமோஜா (நாராந்தனை றோ.க.மகா வித்தியாலயம்), கு.நிலாவேணி (தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), சா.நிரோஜினி (தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை),

சித்திரம்

அ.அஜந்தா (நாராந்தனை றோ.க.மகா வித்தியாலயம்), ச.சாரங்கா (நாராந்தனை கணேசா வித்தியாலயம்), கி.யோணேக்கா (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம்).

கட்டுரை

கீழ்ப்பிரிவு

டெ.தர்ஸன் (நாராந்தனை றோ.க.மகா வித்தியாலயம்), கு.சுபாஜினி (நாராந்தனை றோ.க.மகா வித்தியாலயம்), வி.விஜிதரன் (தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை).

மேற்பிரிவு

யோ.துயித்திரா (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம்), அ.வித்தியா (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம்), சே.செறின் அனிற்றா (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம்).

பொது அறிவுப் போட்டி

கு.சுபாஜினி (நாராந்தனை றோ.க.மகா வித்தியாலயம்), த.தனுசியா (நாராந்தனை றோ.க.மகா வித்தியாலயம்), ம.யனோஜினி (நாராந்தனை றோ.க.மகா வித்தியாலயம்).

# தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு நடமாடும் சேவையும், இரத்ததானமும்


தேசிய சுகாதார வாரத்தின் ஆறாம் நாளான நாளை சனிக்கிழமை குறைகளைத் தீர்க்கும் தினமாக நடமாடும் சேவை ஒன்று நடத்தப்படவுள்ளது. அன்றைய தினம் (காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை) யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சங்கானை பிரதேச வைத்தியசாலை, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை, (காலை 9.00 மணி தொடக்கம் முற்பகல் 11.00 மணி வரை), வேலணை பிரதேச வைத்தியசாலை (முற்பகல் 11.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை) ஆகிய நிலையங்களில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுக்கள் அந்தந்தப் பகுதி சுகாதார சேவை பணியாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

பொது மக்கள் இக்குழுக்களிடம் தமது பகுதி வைத்திய நிறுவனங்களின் சேவைகள் பற்றிய பிரச்சினைகளையும் எதிர்பார்ப்புக்களையும் தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தேசிய சுகாதார வாரத்தின் ஏழாவது தினமான நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டானங்களுக்கும், இரத்ததான நிகழ்வுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தினத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை, ஆதார வைத்தியசாலை தெல்லிப்பளை, ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி ஆகிய நான்கு இடங்களிலும் இரத்ததான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் போன்றோர் இரத்ததான நிகழ்வில் பங்குபற்றி உயிர்காக்கும் உன்னத பணியில் ஒன்றிணையுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


கிளிநொச்சி மாவட்ட இளையோர் கழகத்தினரின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் ஒளிவிழா நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஈ.பி.டி.பி. கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மங்களு விளக்கேற்றுவதையும், பங்குத்தந்தை ஒருவர் மாணவருக்கு பரிசு வழங்குவதையும், இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## தீர்வு வாங்கப் போனவர்கள் எங்கே?

சர்வதேசம் தயாராக காத்திருக்கிறது. தமிழ் மக்கள் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து ஒற்றுமையைக் காட்டுங்கள். தேர்தல் முடிந்தவுடன் தீர்வைக் கொண்டுவந்து காட்டுகிறோம் என்று கடைசியாக நடந்து முடிந்த கிழக்கு மாகாணத் தேர்தலிலும் மற்றுமொரு இறுதித் தடவையாகச் சூளுரைத்தார்கள். இந்தமுறை ஏதோ சரிவரத்தான் போகிறது போலிருக்கிறது என்று, பெருமளவு வாக்குகளை அளித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையே தமிழ் மக்கள் வெற்றிபெறவும் வைத்தார்கள்.

இப்போது கூட்டமைப்பு எம்.பிக்களும் தலைவர்களும் தீர்வுக்காக என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் யார் யார் எந்தெந்த நாட்டிலிருக்கிறார்கள் என்பதை அறியமுடியவில்லை. யாராவது தெரிந்தவர்கள், என்ன முயற்சிகள் திட்டங்கள் செயற்பாடுகள் நடைபெறுகின்றன என்று கட்டுரை எழுதினால் நல்லது.

நமக்குத் தெரிந்தவரை, சிறிதரனும் சரவணபவனும் ஆங்காங்கே பத்துப் பதினைந்து பேரைச் சேர்த்து, முப்பது வருடங்களுக்கு முன் கேட்ட அதே சுலோகங்களை முழங்கியவாறு சிங்களவரோடு சேர்ந்து வாழமுடியாது என்பதை உறுதிப்படுத்திவிடும் ஒரே "முற்போக்குச் சிந்தனையோடு" அவ்வப்போது ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதைத் தவிர, மற்றவர்களெல்லாம் எங்கே? தேர்தல் சமயத்தில் தீர்வைப் பற்றியும், தேர்தல் முடிந்தபிறகு கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவுசெய்து அடுத்த தேர்தலுக்கு 'வேட்பாளர் சீற்'றை உறுதிப்படுத்திக்கொள்ளவுமாகப் பேசிக்கொண்டிருப்பவர்களைக் கூட இப்போது காணவில்லை. ஒருவேளை தீர்வுக்குச் சம்மதிக்க வைப்பதற்காக இரகசியமாக சிங்கள மக்களிடையே சென்று கூட்டங்கள் ஏதேனும் நடத்திக்கொண்டிருக்கிறார்களா? அல்லது தமிழ்மக்களுக்குத் தேவையான தீர்வுப்பொதியை வரைந்தெடுத்துக்கொண்டு உலக நாடுகளிடம் பேசப்போயிருக்கிறார்களா?

அதற்கு முதலில் இவர்களுக்குள் ஒன்றுபட்டு ஒரு தீர்வை இவர்கள் எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டுமே! அதன்பிறகல்லவா அந்தத் தீர்வுக்கு உலகநாடுகளை ஒத்துக்கொள்ள வைத்து, அதற்கும் பின்னர் இலங்கை நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையை ஒத்துக்கொள்ள வைத்து தீர்வைச் சாத்தியமாக்க வேண்டும். இது தவிர்ந்த மந்திரத்தில் மாங்காய் வரவழைக்கும் வழிமுறைகள் இல்லை என்பதையும் இவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும்.

அங்கேதான் குழறுபடி ஆரம்பிக்கிறது. எந்த ஒரு தீர்வுக்கும் இவர்களால் ஒன்றுபட முடியவில்லை. தமிழ்மக்களின் தலைமை தாங்கள்தான் என்று வெளிநாடுகளுக்குச் சொல்லிக்கொள்ளும் இவர்கள் ஒற்றுமையாக ஒரு தீர்வை ஒருமித்த குரலில் வைக்கமுடியவில்லை. அதனாலேயே தமிழ்மக்களை ஏமாற்ற, அரசாங்கம் தீர்வை வைக்க வேண்டும் சர்வதேசம் தீர்வைத் தரவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தீர்வு தேவைப்படுவது இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேசத்துக்குமா? அல்லது தமிழ் மக்களுக்கா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பத்திலிருந்தே தங்களுக்குள் ஒருவர் பின்னால் ஒருவர் குழிபறித்துக் கொண்டே பாராளுமன்றக் கதிரைகளை மட்டும் பிடித்துக்கொள்ள ஒன்றுபட்டிருக்கும் கூட்டாகத்தான் இருந்திருக்கிறது. இவர்களை வலிந்து ஒரு கயிற்றில் கட்டியவர்கள் புலிகள் என்பதால், அவர்கள் இருக்கும்வரை இவர்களுக்குள் இருந்த இருட்டடிகளும் முதுகுப் பக்கத் தாக்குதல்களும் பெரிதாக வெளித்தெரிய வரவில்லை.

புலிகள் முடிவு தெரிந்ததுதான் தாமதம், தொடங்கியது குடுமிப்பிடிச் சண்டை! தேர்தல் வந்தாலொழிய மற்றும்படி நமக்குள்ளே ஒற்றுமையாய்ப் பேசிக்கொள்ள எதுவுமேயில்லை என்பதே இவர்களது இன்றைய நடவடிக்கைகளின் சாராம்சம். தமக்குள்ளே ஒன்றுபட்டுப் பேச முடியாதவர்களை நம்மிடையே தலைவர்களாக வைத்துக்கொண்டு, தமிழ்மக்கள் தங்கள் தீர்வுக்காக ஒருமித்துக் குரல் கொடுப்பது எப்படிச் சாத்தியமாகப் போகிறது?

- ஆசிரியர்

# பிரிவினைக்கு வழிவகுத்துள்ள 13ஆவது திருத்தச் சட்டமூலம்

## ஹெல உறுமய ஆவேசம்

(கொழும்பு)

அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள், புலம்பெயர் தமிழர்கள், தமிழகத்தின் தேவையை நிறைவேற்றுவதற்காகவே 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை வலுப்படுத்துமாறு கோரி அரசாங்கத்தில் உள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனுக்களில் கையெழுத்திடுவதாகவும் 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் நாட்டின் எதிர்கால பயணத்திற்குப் பாரிய தடையாக அமைந்துள்ளதுடன், இந்த திருத்தச் சட்டம் பிரிவினைவாதத்திற்கு உதவியாக அமைந்துள்ளது எனவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமையானது, இலங்கைக்கு பொருத்தமானதா, இல்லையா என்பது தொடர்பாகவும் அதன் மூலம் நாடாளுமன்றத்தின் உச்ச அதிகாரம் குறைத்து மதிப்பிடப்படும் விதம் குறித்தும் உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறையானது இந்தியாவினால், இலங்கை மீது பலவந்தமாக திணிக்கப்பட்ட ஜனநாயக விரோதமான ஒன்று. இதனை வலுப்படுத்துமாறு கூறி, மனுக்களில் கையெழுத்திட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதை மறந்து போயுள்ளனர்.

இவ்வாறு பலவந்தமாகத் திணிக்கப்பட்ட 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமையை வலுப்படுத்துவதா, திருத்துவதா, இரத்துச் செய்வதா என்பது குறித்து விரிவான கலந்துரையாடலுக்கு உட்படுத்த வேண்டும். இது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானம் குறித்து, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சகல தரப்பினரும் தெரிவுக்குழுவின் ஊடாக இணக்கப்பாடு ஒன்றுக்கு வரவேண்டும் என நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க கூறியுள்ளார்.

## மீள்குடியமர்ந்த மக்களுக்கு 20 ஆயிரம் கொடுப்பனவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம அலுவலர் பகுதிகளைச் சேர்ந்த மக்களில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தால் வழங்கப்படும் 20ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெறாத மக்களுக்கான கொடுப்பனவு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் 4.00 மணிவரை கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப் படவுள்ளது.

இதில் முல்லைத்தீவு தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, தெற்கு, வண்ணான்குளம், செல்வபுரம், உப்புமாவெளி, மணற்குடியிருப்பு, கோயிற்குடியிருப்பு, சிலாவத்தை, சிலாவத்தை தெற்கு, முல்லைத்தீவு பட்டணம் ஆகிய 11 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களில் இக்கொடுப்பனவைப் பெறாத மக்கள் இன்றையதினம் குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை என்பனவற்றைக் கொண்டுவந்து தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

# 25 வருடங்களில் தோற்றம் பெற்ற மனிதக் கடத்தல் சமூககெடுதியாகும்

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவிப்பு

(கொழும்பு)

மனிதக் கடத்தல் கடந்த இருபத்தைந்து வருடங்களில் தோற்றம் பெற்று வளர்ந்த சமூக கெடுதியாகும். பல கனவுகளோடு வெளிநாடு செல்லும் பெண்கள் கடுமையான வேலை நிபந்தனைகள், பாலியல் கொடுமை, நவீன அடிமைத்துவம் என்பவற்றுக்கு இரையாகிவிடும்போது நாம் அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

மனிதக் கடத்தலினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு அரசாங்க தங்குமிடமொன்றை திறந்துவைத்தது. அந்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், மனிதக் கடத்தல் கடந்த இருபத்தைந்து வருடங்களில் தோற்றம் பெற்று வளர்ந்த சமூக கெடுதியாகும். நவீன அடிமைத்துவம் என்பவற்றுக்கு இரையாகிவிடும்போது நாம் அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்றார்.

இந்தத் திறப்பு விழாவில் உரையாற்றிய இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிசேல் சிஸன், மனிதக் கடத்தலுக்கு எதிரான இலங்கையின் நடவடிக்கைகளை பாராட்டிப் பேசினார்.

மனிதக் கடத்தலினால் பார்திக்கப்பட்டவர்களை கேவலமாக பார்க்கும் சமூக வழக்கத்தை நீக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை பற்றி குடிவரவுக்கான சர்வதேச நிறுவனத்தின் இலங்கை பிரதிநிதி றிச்சாட் டன்சிங்கர் விளக்கினார்.

மனிதக் கடத்தல்காரரின் கட்டுப்பாட்டிலிருந்த போது ஒருவரது எந்த நடவடிக்கை தொடர்பிலும் வழக்குத் தொடர முடியாது என்பது சர்வதேச ரீதியாக ஏற்கப்பட்டுள்ளது. இந்த தங்குமிடம் மேல் மாகாணத்தில் உள்ளது. பாதுகாப்பு மற்றும் தனித்திருக்கும் தேவை காரணமாக இதன் அமைவிடம் அறிவிக்கப்பட்டமாட்டாது என்றார்.

தங்குமிடம் அமைப்பதற்கான இடத்தை மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க பெற்றுக் கொடுத்தார்.

இதற்கான நிதியை அமெரிக்க அரசாங்கம் வழங்க கட்டடத்தை புனரமைக்கும் வேலையை அமைச்சும் குடிவரவுக்கான சர்வதேச நிறுவனமும் பொறுப்பேற்று செய்து முடித்தன என்றார்.

# பறக்கும் ஒளிக்கற்கள்; கண்காணிக்கும் விமானப்படை

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் இரவு வேளைகளில் தென்பட்ட பறக்கும் ஒளிக்கற்கள் அனேகமாக ஒரு கோளாக இருக்கலாம் என விமானப்படைப் பேச்சாளர் விங்கொமாண்டர் சிராஜ் ஜலால்தீன் தெரிவித்துள்ளார்.

கம்பஹா, சிலாபம், அநுராதபுரம் உள்ளிட்ட பல இடங்களிலும் பறக்கும் ஒளிக்கற்களை தெளிவாக அவதானிக்கக் கூடியதாக இருந்துள்ளது.

இதனால் கடந்த சில நாட்களாக அப்பகுதி மக்களிடையே அச்சம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.


இது தொடர்பில் விமானப்படைப் பேச்சாளர் விங்கொமாண்டர் சிராஜ் ஜலால்தீன் கூறுகையில், குறித்த ஒளிப்பிழம்பினை கண்காணிக்கும் முகமாக 24 மணிநேர சேவையில் விமானப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தற்போது வான்பரப்பு முழுவதுமாக அவதானிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்காக விசேட திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரையில் ஒளிப்பிழப்பினை விமானப்படையினரால் காணமுடியவில்லை. ஏனெனில் ஒளியாக மட்டும் தென்படுவதால் அது விமானப் படையின் ராடர் கருவிகளில் பதிவாகும் வாய்ப்புக்கள் குறைவு.

மேலும் கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விசேட குழுவொன்றும் இது தொடர்பில் அவதானிக்கின்றது.

குறித்த ஒளிப்பிழம்பு ஒரு கோளாக இருக்கலாம் எனவும் அக்குழு குறிப்பிட்டுள்ளது. எனவே மக்கள் வீணாக அச்சம் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்றார்.




**குழந்தை உளவியல் பற்றி பல கட்டுரைகள் மற்றும் நூல்களை எழுதியிருக்கும்ஆலிசன், குழந்தைகளின் அகவுலகைப் புரிந்து கொள்வதன் மூலம், நமது ஆழமான தத்துவக் கேள்விகளுக்கு விடை காண முடியும் என்று வாதிடுகிறார். குழந்தைகள், சீர்திருத்தப் படவேண்டிய சிறிய மனிதர்கள் எனும் மேற்கத்திய பார்வை மாறிவரும் அதே நேரத்தில், குழந்தைகளை சிறிய தெய்வங்களாகக் கொண்டாடும் நமது மரபார்ந்த பார்வையும் சிதைகிறது. குழந்தை வளர்ப்பு சார்ந்த கலாசார மறு பரிசீலனைகள் பரவலாகிக் கொண்டுவரும் இக்காலத்தில், குழந்தைகளின் அகவுலகைப் பற்றிய இப்புதிய புரிதல்கள் நமக்கும் பல சுவாரஸ்யமான திறப்புகளை**



# குழந்தை மனம்

**ஆலிசன் கோப்னிக் (தமிழில்: ச.அனுக்ரஹா)**

பல வருடங்களாகவே, நாம் குழந்தைகளைக் குறைபாடுகள் உடைய வளர்ந்த மனிதர்களாகவே கருதி வந்திருக்கிறோம். அதாவது, அவர்களும் வளர்ந்த மனிதர்களைப் போன்றவர்களே, ஆனால் வளர்ந்த மனிதர்கள் செய்யக்கூடிய சில முக்கியமான செயல்களை செய்ய இயலாதவர்கள் என தலை சிறந்த உளவியலாளரும் வளர்ச்சி உளவியல் மற்றும் பகுக்கும் அறிதிறன் வளர்ச்சி ஆய்வுத் துறைகளைத் தோற்றுவித்தவருமான ழான் பியாஜே (Jean Piaget) அவர்களே, குழந்தைகளை சுய-மைய நோக்குள்ளவர்களாகவும், நெறிகளற்றவர்களாகவும் கருதினார். மேலும், குறைந்த புரிதல் திறனே கொண்ட அவர்களால், அருவமான கருத்துக்களை உணரவோ, அறியவோ முடியாது - காரண-காரியத் தொடர்புகள் போன்றன புரியாது - எனவும் கருதினார்.

ஆனால், உண்மையில் நாம் கண்டறிந்ததோ, சுய-மைய நோக்கும் குறுகிய புரிதலும் கொண்டவர்கள் குழந்தைகள் என்ற கருதுகோளுக்கு முற்றிலும் எதிர்மாறானது.

சின்னஞ்சிறிய குழந்தைகளும் அவர்களைக் குறித்து இதுவரை நாம் கற்பனை . செய்ததை எல்லாம் மீறிய அறிவும், புரிதலும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களால் தர்க்க ரீதியாக யோசிக்க முடியும், காரணங்களையும் அவற்றின் விளைவுகளையும் புரிந்து கொள்ளமுடியும், அடுத்தவரின் பார்வையில் இருந்து யோசிக்க முடியும்.

மார்ஜரி டைலர், பெற்றோர் தம் குழந்தைகளிடம் கவனிக்கும் ஒரு அற்புதமான குணாம்சத்தைப் பற்றி பேசுகிறார். அதாவது, குழந்தைகள் பல நேரம் தங்களுக்கென கற்பனைத் தோழர்களை, குறிப்பிடத்தக்க விவரமான துல்லியத்துடன் சிருஷ்டித்துக் கொள்கிறார்கள். இதற்கான மரபு வழி விளக்கங்கள், ஒன்று குழந்தைகளின் நரம்பியல் சார்ந்த உளவியல் விளக்கங்களாகவோ, அல்லது குழந்தைகள் கற்பனைக்கும் நிஜத்துக்குமான வேறுபாட்டை உணர இயலாதவர்கள் என்ற பியாஜேயின் கருதுகோளாகவோ இருக்கின்றன.

ஆனால் மார்ஜரி, குழந்தைகளிடம் அவர்களின் கற்பனை சகாக்களைப் பற்றிய முறையான அறிவியல் பூர்வமான நேர்காணல்களைப் பதிவு செய்துள்ளார். அவர் குழந்தைகளால் கற்பனையையும் நிஜத்தையும் வேறுபடுத்தி அறிய முடியும் என கண்டுபிடித்துள்ளார். குழந்தைகளால் மிகச் சரியாக வேறுபடுத்த முடியும் என்றும், அவர்களின் மிக நெருங்கிய், ஒளிர்வும் துல்லியமும் கொண்ட கற்பனை சகாக்களும் கற்பனையே என்று அவர்கள் நன்கு உணர்ந்திருப்பதையும் கண்டுபிடித்துள்ளார். மேலும், கற்பனை சகாக்களைப் படைக்கும் குழந்தைகள் மற்ற குழந்தைகளைவிட எந்தவிதத்திலும் கிறுக்காகவோ, புத்திசாலியாகவோ, தனியராகவோ இருப்பதில்லை என்பதையும் கண்டுபிடித்துள்ளார்.

அவரால் நேர்காணப்பட்ட குழந்தைகளில் 60 வீதத்திற்கும் அதிகமான குழந்தைகள், தமக்கு ஒருவித கற்பனை சகாவோ நண்பரோ இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். குழந்தைகள் தம்மை சுற்றியுள்ள நிஜ மனிதர்களைப் புரிந்துகொள்ள இந்தக் கற்பனை சகாக்களை எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்று மார்ஜரி நமக்குக் காட்டுகிறார். எனவே, கற்பனை சகாக்கள் உள்ள குழந்தைகள் மற்ற குழந்தைகளைக் காட்டிலும் மனிதர்களை நன்றாக புரிந்துகொள்கிறார்கள். இது 'மனதின் கோட்பாடு' [Theory of mind] என அறியப்படுகிறது. குழந்தைகளிடம், எது குறைபாடாகக் காணப்பட்டதோ, அது உண்மையில் அவர்களுக்கு உதவக்கூடிய கருவியாகும். மேலும் குழந்தைகள், தம்மைச் சுற்றிய உலகையும், இந்த விஷயத்தில், அவர்களைச் சுற்றி இருக்கும் மனிதர்களையும் புரிந்துகொள்ளுவதற்கு, எப்ப்டி அற்புதமான வகையில் செயல்பட்டுச் சிந்திக்கின்றனர் என்பதற்கான உதாரணமாகும்.

ஐயோனாவும் அவள் கணவரும் தங்களது ஆராய்ச்சியில் கண்டடைந்தது என்னவென்றால், குழந்தைகளிடையே நம்ப முடியாத அளவு பெரிய திடமான சமூக வலைப் பின்னல் இருக்கிறது. அதன் மூலம், ஒரு குழந்தைப் பாடல் வட இங்கிலாந்தில் புழங்கிக் கொண்டிருக்குமானால், ஒரே வருடத்திற்குள் நீங்கள் அதை மேற்கு அமெரிக்கக் கரையோரம் கேட்கலாம்.

இது மிகவும் ஆச்சரியமான ஒன்று, அதுவும் ஃபேஸ் புக் மற்றும் சமூக வலைகளுக்கு முந்திய காலத்தில் - மேலும் அக்குழந்தைகள் மிகவும் இளம் வயதினர்.

கணனி மயமாக்கப்பட்ட சமூக வலைகளுக்கு மிக முந்தைய காலத்திலேயே, குழந்தைகள் தமக்கான சமூக வலைகளைக் கொண்டிருந்தார்கள். அதை அவர்கள் பயணங்கள் மூலம் சாத்தியமாக்கிக் கொண்டார்கள். உதாரணத்திற்கு, ஒரு குழந்தை வட இங்கிலாந்திலிருந்து தெற்கில் லண்டனிற்கு செல்லலாம், அங்கு தன் பள்ளியில் ஏதேனும் புதியதை அறிமுகப்படுத்தலாம், பின் அங்கிருந்து இன்னொரு குழந்தை அமெரிக்காவிற்கு செல்லலாம், அது மேற்கு கரையோரம் சென்று சேரும் வரை இந்த சங்கிலி அப்படியே தொடரும்.

நாம் குழந்தைகளை குறைபாடு உடைய மனிதர்களாக பார்க்காமல், தமக்கென ஒரு உலகை உருவாக்கிக் கொண்டு அவர்களை சுற்றியுள்ள உலகைப் புரிந்து கொள்ள முயலும் மனிதர்களாகவே பார்க்கவேண்டும். மேலும், அவர்கள் உருவாக்கும் உலகம், பெரும்பாலும் நாம் வளர்ந்தவர்களாக உருவாக்கக் கூடிய உலகை விட மிகவும் வளமையானது.

நமது மரபான புரிதல் என்பது குழந்தைகள் மிகவும் சுய-மைய நோக்குடையவர்கள், அடுத்தவர்களுடைய பார்வையில் இருந்து யோசிக்க மிகவும் சிரமப் படுபவர்கள், அவர்களால் மனதிற்கும் உடலிற்குமான வேறுபாடுகளைப் , புரிந்துகொள்ள முடியாது போன்றவை ஆகும். இவை எல்லாம் நாம் பியாஜேயிடம் இருந்து பெற்றவை. ஆனால், ஜானெட் ஆஸ்டிங்க்டன் நமக்கு தொகுத்து அளித்திருப்பது, குழந்தைகள் தம் மனங்களைப் புரிந்து கொள்வதில் எத்தனை பண்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் பற்றிய ஆய்வுகள் ஆகும்.

மூன்றிலிருந்து நான்கு வயதிற்குள் குழந்தைகள், மனிதர்கள் ஒரே விஷயத்தைப் பற்றி பல கோணங்களில் யோசிக்க முடியும் என்பதைப் புரிந்துகொள்ள ஆரம்பிக்கிறார்கள். ஒரு உதாரணத்திற்கு, நான் உங்களிடம் ஒரு மூடிய மிட்டாய் டப்பாவைக் காண்பிக்கிறேன். ஆனால், அதனுள் பென்சில்கள் இருக்கின்றன. அது மூடியிருப்பதால், அது உங்களுக்கு தெரிய வாய்ப் பில்லை. ஆக, நான் அதனுள் பென்சில்கள் இருப்பதாக நினைக்கலாம், ஆனால் நீங்கள் அதனுள் மிட்டாய்கள் இருப்பதாக நினைக்கலாம். இதை, குழந்தைகள் மூன்றிலிருந்து நான்கு வயதிற்குள் அறிந்து கொள்கிறார்கள். இந்த சின்னஞ்சிறிய வயதுக் குழந்தைகள், எப்படிப் பல மனிதர்களும் உலகைப் பற்றிய பல பார்வைகளைக் கொண்டிருக்கக்கூடும் என்ற ஆழமான புரிதலைப் பெறுகிறார்கள்.

குழந்தைகள் கற்பதில் அசாதாரணத் திறனுடையவர்கள். ஆனால், உலகை எதிர்கொள்ளும் சாமர்த்தியம் அவர்களிடம் குறைவு. அவர்களால் கற்றுக்கொள்ள முடியுமே தவிர, தாமாகவே சப்பாத்துக்களை அணிந்து கொள்வதோ, காற்சட்டையை உடுத்திக்கொள்வதோ தினமும் காலை பள்ளிக்கு செல்வதோ அவர்களால் முடியாது.

நான் அடிக்கடி சொல்வதுண்டு, குழந்தைகள் சிறு விஞ்ஞானிகள் இல்லைதான், ஆனால் விஞ்ஞானிகள் என்னவோ பெரிய குழந்தைகளே!

ஸேரா ஹார்டி தனது ஆய்விலிருந்து அழுத்தமாக ஒரு விஷயத்தைக் கூறுகிறார். நம்முடைய பரிணாமச் சிறப்பியல்பு என்பது நாம் நம் பராமரிப்பிற்காக நம் தாயை மட்டுமே சார்ந்திருக்க முடியாது என்பதாகும்.

உண்மையில், ஒரு குழந்தையை வளர்க்க. தந்தை, தாத்தாக்கள், பாட்டிகள், மாமாக்கள், அத்தைகள் என நமக்கு ஒரு சமூகமே தேவைப்படுகிறது. நமக்கான நடைமுறை சவால், இங்கு நாம் இதை எப்படி சாத்தியப்படுத்த முடியும் என யோசிப்பதாகும். ஒரு உடனடியான முயற்சியாக, நாம் விளையாட்டுப் பள்ளிகளையும், ஒரு கிராமத்து சமூகத்தைப் பிரதி எடுக்கும் பிற அமைப்புகளையும் உருவாக்கலாம். அதாவது, மூன்று வயது குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதற்கு பதில், ஒரு இலட்சிய கிராமத்தின் சூழலைக் கொடுக்கும் வகையில் அமைந்த ஒரு விளையாட்டுப் பள்ளிக்கு அனுப்பலாம். அங்கு குழந்தைகள் துழாவித் துளைந்து, தாமாகப் பல விஷயங்களைக் கண்டறியலாம், விளையாடலாம், தம் மீது அக்கறை உள்ள, அவர்களைக் கண்காணிக்கும் பெரியவர்களுடன் இருக்கலாம். இது குழந்தைகளின் உண்மையான பெற்றோர் அவர்களுடன் இருப்பதற்கும், அவர்களைப் பராமரிக்கும் நேரத்தில் தம் வேலையையும் பார்த்துக்கொள்வதற்கும் ஏதுவான ஒரு சமூக அமைப்பை நமக்கு சுட்டுகிறது. இத்தகைய அமைப்பைத் தான் நாம் நம் பரிணாமப் படிநிலையின் முந்தைய கட்டத்தில் கொண்டிருந்திருப்போம்.

# நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்பது அரசாங்க உறுப்பினர்களின் அறிக்கை

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு



(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புறக்கணித்துவிட்டதாலும், சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்படாததாலும் தனக்கு எதிரான கண்டனத் தீர்மானத்தை ஆராய அமைக்கப்பட்ட தெரிவுக் குழுவின் அறிக்கையை, அரசாங்க உறுப்பினர்களின் அறிக்கை என்றுதான் கருத முடியும் என தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து ஷிராணி பண்டாரநாயக்கா தனது வழக்கறிஞர்கள் மூலமாக ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார். தெரிவுக் குழுவின் அறிக்கை தமக்கு கிடைக்கப் பெறவில்லை என்று அதில் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை தனக்கு கிடைத்தவுடனேயே அது குறிதது தலைமை நீதிபதி பதிலளிப்பார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஒரு தரப்பினரின் வாதத்தை மாத்திரம் ஏற்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாகவும், சாட்சிகளை குறுக்கு விசாரணை நடத்த அனுமதிக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. குறுக்கு விசாரணைகள் நடத்த அனுமதி அளிக்கப்பட்டால் முக்கிய சாட்சிகள் அளித்துள்ள ஆவணங்களின் உண்மையற்ற தன்மையை தன்னால் நிரூபிக்க முடியும் என்று தலைமை நீதிபதி கூறியுள்ளார்.

இந்த விசாரணை ஆவணங்கள் அடிப்படையில்தான் அமையும் என்று முதலில் தனக்கு அறிவிக்கப்பட்டதாகவும், ஆனால் தான் வெளிநடப்பு செய்த பிறகு, 16 சாட்சியங்கள் அழைக்கப்பட்டு அவர்கள் கூறியது பதிவுசெயயப்பட்டுள்ளதாகவும், அந்த சாட்சியங்களைக் குறுக்கு விசாரணை செய்யக் கூடிய வாய்ப்புகள் தலைமை நீதிபதிக்கு அளிக்கப்படவில்லை என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தன்மீது கூறப்பட்டுள்ள அனைத்துப் புகார்களும் அடிப்படையற்றவை என்றும், காழ்ப்புணர்வால் கூறப்படுபவை என்றும், தான் குற்றமற்றவர் என்றும் தலைமை நீதிபதி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

தெரிவுக் குழுவின் பரிந்துரைகள் தனக்கு கிடைத்தவுடன், தன்மீதான குற்றச்சாட்டுகள் தவறானவை என்பதை தன்னால் நிரூபிக்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# இரணைமடு ஓடுபாதை விரைவில் திறக்கப்படும்



(கொழும்பு)

இரணைமடுவில் அமைக்கப்பட்ட விமான ஓடுபாதை புனரமைக்கப்பட்டு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் விரைவில் அதிகாரபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. இரணைமடு ஓடுபாதையை விமானப்படை தற்போது புனரமைத்து வருகிறது.

இதுவரை 1100 மீற்றர் நீளமான ஓடுபாதை புனரமைப்பு வேலைகள் முடிவடைந்துள்ளன. இந்த ஓடுபாதையை 1500 மீற்றர் வரை விரிவாக்குவதற்கான பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சி-130 போன்ற கனரக போக்குவரத்து விமானங்களும் தரையிறங்கும் வகையில் இந்த ஓடுபாதை விரிவாக்கப்பட்டு வருகிறது. இந்த ஓடுபாதை புனரமைப்பு பணிகள் முடிவடைந்ததும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அதிகாரபூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளது.

இதற்கு முன்னோடியாக, விமானப்படைத் தளபதி எயர் மார்சல் ஹர்ச அபேவர்த்தன கடந்த 9 ஆம் திகதி வை-12 விமானம் ஒன்றை இந்த ஓடுபாதையில் தரையிறக்கி, சோதனை நடத்தியுள்ளார்.

# வெலிக்கடை அறிக்கை அடுத்தவாரம் வெளியீடு

(கொழும்பு)

வெலிக்கடை சிறையில் அண்மையில் இடம்பெற்ற கலவரம் தொடர்பில் ஆராய அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது.

சிறைச்சாலைகள் திணைக்களத்தால் அமைக்கப்பட்ட மூன்று பேர் கொண்ட குழு இவ்வறிக்கையை வெளியிடும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பி.டபிள்யூ.கொடிப்பிலி தெரிவித்தார்.

கடந்த நவம்பர் 9 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலைக்கு சோதனைக்கென சென்ற விசேட அதிரடிப்படையினா மற்றும் பொலிஸார், இராணுவத்தினருடன் கைதிகள் மோதலில் ஈடுபட்டனர்.

இந்த மோதலில் 27 கைதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், சிறைச்சாலை அதிகாரிகள் சிலரும் படுகாயமடைந்தனர்.

இந்த மோதல் குறித்து விசாரணை நடத்த சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு என்பன வெவ்வேறு குழுக்களை அமைததுள்ளன. இதேவேளை, அமைச்சினால் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையும் அடுத்த வாரமளவில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள்; உண்மைகள் வெளிவரவேண்டும்

## கோருகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் யாருடையவை என ஜே.வி.பி. கேள்வி எழுப்பியுள்ளது.

மாத்தளை பொது வைத்தியசாலை வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழி தொடர்பில் உண்மைகளை அரசாங்கம் அம்பலப்படுத்த வேண்டுமென அக் கட்சி கோரியுள்ளது.

குறித்த இடத்தில் சடலங்கள் புதைக்கப்பட்டமை தொடர்பிலோ, மொத்தமாக அதிகளவானவர்கள் உயிரிழந்தமை பற்றியோ எவ்வித உத்தியோகபூர்வ தகவல்களும் கிடையாது எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் மீட்கப்பட்டு வரும் மனித எச்சங்கள் தொடர்பில் அரசாங்கம் உதாசீனமாக போக்கைப் பின்பற்றி வருவதாக குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த மனித எலும்புக் கூடுகள் பற்றிய பூரண விசாரணை துரித கதியில் நடத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் மீட்கப்பட்ட மனித மண்டையோடு மற்றும் எலும்புக்கூடுகள் குறித்து தொல்பொருள் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாத்தளை சட்ட வைத்தியர்களின் கோரிக்கைக்கு அமைய இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் பட்டமளிப்பு நிறுவனத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்தார்.

# மற்றொரு குழுவின் நியமனத்திற்கு தேசிய, சர்வதேச எதிர்ப்பே காரணம்

## என்கிறார் மங்கள எம்.பி



(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்பட்டு வரும் எதிர்ப்பலைகள் காரணமாக தாம் நியமித்த குழுவே சுயாதீனமற்றது என பகிரங்கமாக ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் அமைப்பு மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உதவி களைப் பெற்றுச் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளும் வகையில் குழுவொன்றை நியமிக்கும் நேர்மையான நோக்கத்துடன் அரசாங்கம் செயற்பட்டால், அதற்கு எதிர்க்கட்சி தனது ஆதரவை வழங்கும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தெரிவுக்குழுவின் விசாரணைகள் நியாயமானதாக இல்லை எனக்கூறி, ஜனாதிபதி தாமே மற்றொரு குழுவை நியமித்தால் அது குறித்து நம்பிக்கை கொள்ள முடியாது என்பதை புதிதாக கூறவேண்டியதில்லை எனவும் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

# வெட்டிய குழிக்குள் இருந்து மீள அரசுக்கு ஒளிமயமான சந்தர்ப்பம்

## என்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

தான் வெட்டிய குழிக்குள் விழுந்துள்ள இந்த அரசாங்கத்திற்கு அதிலிருந்து மீண்டெழுவதற்கான ஒளிமயமான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணையை விசாரித்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையை மீண்டும் ஆராய்வதற்காக சுயாதீன குழுவை நியமிக்கப்போவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை தொடர்பில் நாம் எமது கவனத்தை செலுத்தியுள்ளோம்.

அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள இந்த இறுதிச் சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

பொதுநலவாய அமையத்தின் சம்பிரதாயத்தின் பிரகாரம் பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் செயலாளர் நாயகத்தினால் பெயர் குறிப்பிடுகின்ற நீதியரசர்கள் கொண்ட சுயாதீன மற்றும் பக்கச்சார்பற்ற குழுவின் ஊடாக தற்போது முன்வைக்கப்பட்டுள்ள குற்றப்பிரேரணை குழுவின் அறிக்கையை மீண்டும் விசாரிப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுப்பார் எனத் தாம் நம்புவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்வியமைச்சரின் குற்றச்சாட்டு மறுக்கிறது ஆசிரியர் ஒன்றியம்

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடுவதில் ஏறபட்ட தாமதத்திற்கு பல்கலைக்கழக ஆசிரியர்களே காரணம் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்திருந்த குற்றச்சாட்டில் எவ்வித உண்மையுமில்லை என பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை பெறுபேறு வெளியீட்டில் ஏற்பட்ட கால தாமதம் பரீட்சைத் திணைக்களத்தின் பிழையினால் ஏற்பட்டதல்ல எனவும், பல்கலைக்கழக பேராசிரியர்களினாலே ஆகும் எனவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளைப் புறக்கணிக்கப் போவதாக பல்கலைக்கழக பேராசிரியர்கள் விடுத்த எச்சரிக்கையை, கல்வி அமைச்சு கவனத்திற் கொள்ளத் தவறியதாக பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியத்தின் தலைவர் நிர்மல் ரஞ்சித் தேவ்சிறி தெரிவித்துள்ளார்.

# சிறந்த சமுதாயம் உருவாவதற்கு தாய்மார்களின் பங்களிப்பு அவசியம்



(யாழ்ப்பாணம்)

எந்தவொரு தாயும் தன் பிள்ளையை தெருவில் நின்று சண்டையிடு என அனுப்புவதில்லை எனவே சிறந்ததொரு சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு தாய்மார்களின் பங்களிப்பு இன்றியமையாதது என ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்பாளர் தம்பித்துரை ரஜீவ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் திருநெல்வேலி - கலைச்சுடர் சனசமூக நிலையத்தின் தாய்மார் குழு ஒழுங்கமைப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தனது பிள்ளையின் அனைத்து செயற்பாடுகளிலும் தாய்மார்களின் அக்கறை இன்றியமையாதது. அந்தவகையில் தாய்மார்களின் நலன்களை நாம் பாதுகாத்து அவர்களது தேவைகளை நாம் பூர்த்தி செய்ய வேண்டியது எமது கடமையாகும் எனத் தெரிவித்த அவர் தாய்மார்களின் தேவைகளை கேட்டறிந்து கொண்டார். அத்துடன் சுயதொழிலினை ஊக்குவிப்பதற்காக தாய்மார் குழுவிற்கு மூன்று தையல் இயந்திரங்களை உடனடியாக வழங்குவதாகவும், சனசமூக நிலையத்திற்கு தேவையான மின் இணைப்பினை உடனடியாக வழங்குவதாகவும் மேலும் பிரதேச சிறுவர் கல்வியினை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்குரிய ஆலோசனைகளை வழங்கியதுடன் கல்வி வளர்ச்சிக்குரிய நிதி உதவிகளையும் வழங்குவதாக உறுதியளித்தார்.

இதன்போது பிரதேச சுகாதார உத்தியோகத்தர், குடும்ப நலன்மேம்பாட்டு உத்தியோகத்தர், பொதுமக்கள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

# கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் மாற்று வலுவுடையோர் தின விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் சர்வதேச முதியோர் மாற்றுவலுவுள்ளோர் தின விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் முதன்மை விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செல்லமுத்து சிறிநிவாசன், வடமாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன் நிகழ்த்தவுள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட வறிய முதியோர் மாற்றுவலுவுடையோர் ஆகியோர் பரிசுப்பொருள்கள் வழங்கி கௌரவிக்கப்பட உள்ளனர்.

கலை நிகழ்வுகள் நடைபெறுவதுடன் நன்றியுரையை முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் செல்வி.சண்முகம் காந்திமதி வழங்கவுள்ளார்.

(90)

# முரசின் இன்றைய பலன்

(14.12.2012 – வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் கார்த்திகை மாதம் 29 ஆம் திகதி. நட்சத்திரம் மூலம் மாலை 5.28 வரை. திதி பிரதமை பிற்பகல் 12.42 வரை. இராகுகாலம் 10.51 - 12.21 வரை. சுபநேரம் 6.21 - 7.51 வரை. அமிர்தசித்தம்

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உங்களால் பலன் பெற்றவர் உதாசீனம். உங்கள் பெருந்தன்மை அவரை மாற்றும். தொழில் வளர்ச்சி தாமதம். வரவை விட செலவு. ஓய்வு ஆரோக்கியம் தரும். |
| ரிஷபம் | பிறருக்கு ஆதரவு தருவீர்கள். தொழிலில் அனுகூலம். தாராள பணவரவில் சுபகாரிய செலவு. குடும்ப மகிழ்ச்சி. |
| மிதுனம் | தடங்கலும், அலைச்சலும். அனுபவசாலிகளின் உதவி கிடைக்கும். சிக்கனம் நல்லது. போக்குவரத்தில் கவனம். புது முயற்சிகள் வேண்டாம். |
| கடகம் | வாழ்வின் வளர்ச்சிக்கு புதிய முயற்சி. இடையூறு செய்பவரிடமிருந்து விலக, நன்மை. தொழில் சராசரி. பணவரவில் தாமதம். |
| சிம்மம் | அக்கம் பக்கத்தவருடன் அதிகப் பேச்சு வேண்டாம். செயல்களில் நேர்த்தி. கூடுதல் பணி. அளவான பணவரவு. சேமிப்பு செலவுக்கு பயன்படும். |
| கன்னி | மனதில் உறுதியும், செயல்களில் புதிய பரிமளிப்பும். உறவினரால் நன்மை. தொழில் இலக்கு நிறைவேறும். பணவரவில் திருப்தி. குடும்பம் கூடுதல் பாசம். |
| துலாம் | தன்மான உணர்வு. பிறருக்கு உதவுவதில் மகிழ்வு. தொழில், இடையூறு விலகி, வளர்ச்சி. ஆதாய வரவு. சொத்து சேர்க்கை அனுகூலம். |
| விருச்சிகம் | உயர்ந்த செயல்களால் புகழ். உறவினர் நண்பர் பாராட்டுவர். தொழில் இலக்கு நிறைவேறும். அபரிமிதமான பணவரவு. பொன், பொருள் சேர்க்கை. |
| தனுசு | சமூகத்தின் பார்வையில் நன்மதிப்பு. தொழிலில் கூடுதல் மூலதனம். ஆதாய பணவரவு. புத்திரர் விரும்பியது செய்வீர்கள். வெளியூர் நற்செய்தி. |
| மகரம் | உறவினர் நல் அன்பு. பயன் அறிந்து பேசுவீர்கள். நன்மை வரும். தொழில் செழிக்க, புதிய திட்டம். கடன் வசூலாகும். வீட்டுப் பொருள் வாங்குதல். |
| கும்பம் | ஓய்வு. கவனக் குறைவால் பணச்செலவு அதிகரிக்கும். தொழில் குளறுபடி சரியாகும். பயணத்தில் மாறுதல். புத்திரரைத் திருத்துவீர்கள். |
| மீனம் | திட்டமிட்ட பணிகளில் மாற்றம். அதிக நேரம் பணி. எதிர்பார்த்த பணவரவு. சிக்கனம் பின்பற்றுவீர்கள். உணவில் கவனம். குடும்ப உதவி கிடைக்கும். |

# ஓய்வூதியக்கொடுப்பனவு; திகதி விபரம் அறிவிப்பு

(அச்சுவேலி)

அரச ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியதாரர்களுக்கான 2012 ஆம் ஆண்டுக்குரிய ஓயிவூதியக் கொடுப்பனவுக்குரிய திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய பின்வரும் கால அட்டவணைக்கேற்ப ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது. தை மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை, மாசி மாதம் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, பங்குனி மாதம் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, சித்திரை மாதம் 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, வைகாசி மாதம் 09 ஆம் திகதி வியாழக்கிழமை, ஆனி மாதம் 10 ஆம் திகதி திங்கட்கிழமை, ஆடி மாதம் 10 ஆம் திகதி புதன் கிழமை, ஆவணி மாதம் 08 ஆம் திகதி வியாழக்கிழமை, புரட்டாதி மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்கிழமை, ஐப்பசி மாதம் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, கார்த்திகை மாதம் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மார்கழி மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை. இது தொடர்பாக அரச ஓய்வூதியர்கள் அனைவருக்கும் அவர்களுக்குரிய பிரதேச செயலகங்களினூடாக இவ்விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. (03)

# கொடுப்பனவு அதிகரிப்பு

(அச்சுவேலி)

நடைபெற்று வரும் கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சையில் பல்வேறு பணிநிலைகளிலும் கடமையாற்றி வரும் உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் இம்முறை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய பரீட்சை நிலைய இணைப்பாளர்கள், உதவி இணைப்பாளர்கள், பிரதம மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள், நோக்குநர்கள், பரீட்சை மண்டப சிற்றூழியர்கள் ஆகியோருக்கான கொடுப்பனவுகள் முன்னைய காலங்களில் வழங்கப்பட்டதை விட அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் இது தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்படும் எனவும் அத்தகவல்கள் மேலும் தெவிக்கின்றன.

(03)

# நடைபெறாத பட்ஜெட் கூட்டம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை நகர சபையின் வரவு செலவுத் திட்ட கூட்டம் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவரும் வராமையால் நடைபெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெறுவதாக அறிவித்திருந்த நிலையில், நகர சபைக்கு புதிய தவிசாளரை கடந்த 10 ஆம் திகதிக்குள் நியமிக்க வேண்டும் என சபை ஆளும் கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதனை அடுத்தே உறுப்பினர்கள் கூட்டத்திற்கு சமுகமளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தவிசாளர் தனது பதவியை தான் ஒருபோதும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்க் கூறியதாக உபதவிசாளர் சதீஸ் தெரி வித்துள்ளார். (116)

# சுகாதார விழிப்புணர்வு வாரம் யாழ். நகரில் நடைபவனி

(யாழ்ப்பாணம்)

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு ஆரோக்கிய வாழ்விற்கான நடைபவனி நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலை முன்றலில் இருந்து ஆரம்பித்து யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நிறைவடைந்தது.

இதில் வடமாகாண ஆளுநர் சந்திரசிறி, ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), வடமாகாண சுகாதார அமைச்சின செயலாளர் ரவீந்திரன், அரச அதிபர், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி, வைத்திய அதிகாரிகள், தாதியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமாகிய தேசிய சுகாதார




வாரம் எதிர்வரும் 17 ஆம் திகதி நிறைவடையவுள்ளதுடன், இக்காலப் பகுதியில் மக்களிடையே தொற்று நோய் மற்றும் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது

# எதிர்காலத்திட்டம் குறித்து சச்சினிடம் பேசுங்களேன்



சச்சினின் எதிர்காலத் திட்டம் குறித்து, அவரிடம் யாராவது பேச வேண்டும் என, பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வாசிம் அக்ரம் தெரிவித்தார். சிரேஷ்ட வீரர் இரண்டு ஆண்டுகளாக, டெஸ்ட் போட்டியில் சதம் அடிக்கவில்லையெனில், அவரது ஆட்டம் குறித்து கேள்வி வரத்தான் செய்யும். சர்வதேச கிரிக்கெட்டில் சச்சின் நுழைந்த போது, சதத்தில் சதம் காண்பார், பல சாதனைகள் புரிவார் என யாரும் எதிர்பார்க்கவில்லை. இப்போது, அவர் செய்ய வேண்டிய சாதனை எதுவுமில்லை. பொண்டிங் சுய மதிப்பீடு செய்து கொண்டதால் தான், ஓய்வு பெற்றார். தற்போது, பூனைக்கு யார் மணி கட்டுவது, என்பது தான் கேள்வியாக உள்ளது. டோனி தலைமையை முன்னாள் வீரர்கள் வெளிப்படையாகவே விமர்சனம் செய்கிறார்கள். சச்சினுக்கு எதிராக இப்படிப் பேச முடியுமா? இதுபோன்ற நிலையில் இருந்தால், ஓய்வு பெற்றிருப்பேன் என, கங்குலி தெரிவித்தார். சச்சின் இன்னும் ஆறு மாதங்கள் அல்லது அதற்கும் மேல் விளையாட வேண்டும் என எண்ணுகிறார். இவரைப் போன்ற, ஜாம்பவான் வீரர்களுக்கு, அறிவுரை சொல்வது என்பது கடினமானது. அணியின் மாற்றத்தை கவனமாகச் செய்ய வேண்டும். இதில் யாருடைய தலையீடும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்திய அணியின் நடுவரிசையில் புதுமுகம் தேவைப்படுகிறது. சச்சினின் எதிர்காலத் திட்டம் குறித்தும், எத்தனை நாட்கள் அணியில் நீடிப்பார் எனவும், யாராவது அவரிடம் பேசவேண்டும். அப்போது தான், தேர்வாளர்கள் மற்றொரு வீரரைத் தேட முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சர்வதேச நன்நாளில் குடும்பஸ்தரான சாகிப்



(டாக்கா)

பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர் சாகிப் அல் ஹசன், விசேடமான நாளான நேற்று முன்தினம் (12-12-12), காதலியை மணம்முடித்தார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர் சாகிப் அல் ஹசன், (வயது-25). கடந்த 2006இல் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் காலடி வைத்த இவர், இதுவரை 28 டெஸ்ட் (1835 ஓட்டங்கள், 102 விக்.), 126 ஒருநாள் (3635 ஓட்டங்கள். 160 விக்.), 24 சர்வதேச ருவென்ரி-20 (84 ஓட்டங்கள், 27 விக்.) போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

சிறந்த சகலதுறை வீரரான சாகிப், நேற்று முன்தினம் புதிய அத்தியாயத்தைத் தொடக்கினார். உலகமே எதிர்பார்த்து காத்திருந்த விசேட நாளான, 12-12-12இல் தனது நீண்டநாள் தோழியை திருமணம் செய்தார். இவர், அமெரிக்காவைச் சேர்ந்த பங்களாதேஷ் வம்சாவளி உம்மி அகமது ஷிசிரை மணம் முடித்தார். இவர்களது திருமண நிகழ்ச்சிக்கு நெருங்கிய உறவினர்கள், நண்பர்களுக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டது.

சமீபத்தில், பங்களாதேஷ் - மேற்கிந்தியத்தீவு அணிகள் மோதிய, ருவென்ரி -20 போட்டியின் போது சாகிப், ஷிசிரை வருங்கால மனைவி என சக வீரர்களுக்கு அறிமுகம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# ஓய்வுபெற்றார் தங்க விசில் நடுவர்



புகழ்பெற்ற தங்க விசில் விருது பெற்ற அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த ஹொக்கி நடுவர் டேவிட் ஜென்டில்ஸ் ஓய்வு பெற்றுள்ளார்.

கடந்த ஞாயிறன்று முடிவடைந்த சம்பியன்ஸ் கிண்ண ஹொக்கி தொடரின் இறுதி ஆட்டத்தில் நடுவராகப் பணியாற்றிய பின்பு அவர் இந்த முடிவை அறிவித்தார்.

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த டேவிட் ஜென்டில்ஸ் (வயது-47) மூன்று உலகக் கிண்ணம், மூன்று ஒலிம்பிக் போட்டிகள் உட்பட 172 சர்வதேச ஹொக்கி போட்டிகளில் நடுவராகப் பணியாற்றியுள்ளார்.

1996ஆம் ஆண்டு முதல் நடுவராக பணியாற்றி வந்த அவருக்கு கடந்த 2008ஆம் ஆண்டு சர்வதேச ஹொக்கி சம்மேளனம் தங்க விசில் விருது வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹீரோ வில்லனாகிவிட்டாரா?



இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஏற்பட்ட தோல்வி காரணமாக இந்திய அணி கப்டன் டோனியை சிலர் விமர்சிக்கிறார்கள். இது துரதிரஷ்ட வசமானது. அவரை மட்டும் விமர்சிக்கக் கூடாது. அணி வீரர்கள் அனைவருமே தோல்விக்கு பொறுப்பானவர்கள் என இலங்கை அணியின் முன்னாள் கப்டன் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு உலகக்கோப்பையை வென்றபோது டோனி ஹீரோவாக இருந்தார். தற்போது வில்லனாகி விட்டார். ஆனால் இதில் ஆச்சரியம் இல்லை. இது மாதிரியான நிலைமை இந்திய கிரிக்கெட் வீரர்கள் சிலருக்கு ஏற்பட்டதை பார்த்து இருக்கிறேன். உலக கோப்பையை வென்றால் பாராட்டுவது. ஆனால் தோற்றால் கப்டன் தான் பொறுப்பு என்று குற்றம்சாட்டுவது சகஜமாகி விட்டது. டோனி 2 உலக கோப்பையை (ருவென்ரி-20, ஒருநாள் போட்டி) பெற்றுக்கொடுத்துள்ளார். இதை மிகவும் எளிதான பணியாக நான் நினைக்கவில்லை. ஆனால் மோசமாக ஆடினால் அவரை குற்றம் சாட்டுகிறார்கள். இந்திய துடுப்பாட்ட வீரர்களால் 2 நாட்களுக்கு நிலைத்து நின்று ஆட முடியாவிட்டால் அவர் என்னசெய்வார். கப்டன் பதவியில் அவர் சிறப்பாகசெயற்படவில்லை என்று கருதினால் அவருடன்தேர்வுக் குழுவினர் விவாதிக்க வேண்டும்எனவும் தெரிவித்தார்.

# அபாரமான தைரியம்

(மும்பை)

டோனியை அணித் தலைவர் பதவியிலிருந்து விலக்க வேண்டுமென தேர்வுக்குழு முடிவெடுத்தபோது பி.சி.சி.ஐ. தலைவரும் சென்னை சூப்பர் கிங்ஸ் உரிமையாளருமான ஸ்ரீனிவாசன் ஒப்புக் கொள்ளவில்லை என்று தைரியத்திற்கு பெயர் பெற்ற அமர்நாத் கூறியமையானது அவரது .அபார தைரியத்தை எடுத்துக்காட்டுவதாக கவாஸ்கர் புகழாரம் சூட்டியுள்ளார்.

ஜிம்மி செய்தது அபாரமான தைரியமிக்க காரியம், கற்றுக் கொள்ளவேண்டிய பாடங்கள் சில உள்ளன. அவரிடம் உறுதியும், தைரியமும் உள்ளது விளைவு-களை சந்திப்பதில் அவர் தயங்காதவர்.

எனினும், டோனியை நீக்குவதற்கு இது சரியான தருணமல்ல. தற்போது டோனிக்கான மாற்று வீரர் தயாராகவில்லை. டோனி கூட விக்கெட் கீப்பிங்கில் அதிகமாக பிடிகளையோ, ஸ்டம்பிங்குகளையோ கோட்டை விடவில்லை.

நாக்பூர் டெஸ்டிற்குப் பின்னர் டோனிக்கான மாற்றை யோசிக்கலாம் என கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

# உலகக் கிண்ண கபடி இறுதியில் இந்தியா, பாகிஸ்தான்



(பதிண்டா)

உலக கோப்பை சர்கிள் கபடி தொடரின் இறுதிப் போட்டிக்கு இந்திய, பாகிஸ்தான் அணிகள் முன்னேறியுள்ளன.

பஞ்சாபில், 3ஆவது உலக கோப்பை சர்கிள் கபடி தொடர் நடக்கிறது. முதல் அரையிறுதியில் இந்தியா, ஈரான் அணிகள் மோதின. இதில் அபாரமாக ஆடிய இந்திய அணி 71-23 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. மற்றொரு அரையிறுதியில் பாகிஸ்தான் அணி 53-27 என்ற கணக்கில் கனடாவைத் தோற்கடித்தது.

லூதியானாவில், நாளை நடக்கவுள்ள இறுதிப் போட்டியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

# முதலிடம்

லண்டனில் நடைபெற்ற கிளாசிக் செஸ்தொடரில் நோர்வேயின் கார்லசன் 18 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். லண்டனில் நான்காவது கிளாசிக் செஸ் தொடர் நடைபெற்றது இதன் இறுதி மற்றும் ஒன்பதாவது சுற்றில் ஆனந்த், நோர்வேயின் கார்லசனை, எதிர் கொண்டார்.

இப்போட்டி முடிவின்றி தொடர்ந்ததையடுத்து போட்டியை சமநிலை செய்வதற்கு இருவரும் ஒப்புக் கொண்டனர். இதனையடுத்து இந்தியாவின் ஆனந்த், 9 புள்ளிகளுடன் 5ஆவது இடத்தைப் பிடித்தார். முதல் இடத்தை 18புள்ளிகளுடன் நோர்வேயின் கார்லசன் தட்டிச் சென்றார். இரண்டாவது, மூன்றாவது இடங்களை முறையே ரஷ்யாவின் விளாடிமிர் கிராம்னிக் 16 புள்ளிகளுடனும் இங்கிலாந்தின் மைக்கேல் ஆதம்ஸ் 13 புள்ளிகளுடனும் பெற்றனர்.

# தலைமை பதவிக்கு "குட்பை"

(சிட்னி)

அவுஸ்ரேலிய சுற்றுலாவின் பின்னர் தாம் அணியின் தலைமைப்பதவியில் இருந்து விலகப்போவதாக இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன அறிவித்துள்ளார் அவுஸ்ரேலிய ஹோபாட்டில் வைத்து அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார் இலங்கை அணிக்கும் அவுஸ்ரேலிய அணிக்கும் இடையிலான சுற்றுலா கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் ஜனவரி 28 ஆம் திகதியன்று முடிவடையவுள்ளன. இதன் பின்னரே ஜெயவர்த்தன தலைமைப்பதவியில் இருந்து விலகவுள்ளார்.

# நாக்பூர் டெஸ்ட் ஆமை வேகத்தில் இங்கிலாந்து



(நாக்பூர்)

இந்திய அணிக்கெதிரான நாக்பூர் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி ஆமை வேகத்தில் ஆடி வருகின்றது.

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று நாக்பூரில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது.

இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் இருந்தது. முதலிரு விக்கெட்டுக்களை 16 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்து தடுமாறியிருந்தது. இந்நிலையில் இணைந்த அதிரடி வீரர் பீற்றர்சன், ட்ரொட் இணை அணியை சரிவிலிருந்து மீட்கும் வகையில் ஆடினர். இருப்பினும் இந்த ஜோடி 86 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, இங்கிலாந்து அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கெவின் பீற்றர்சன் 188 பந்துகளை எதிர்கொண்டு 10 பவுண்டரிகள் அடங்கலாக 73 ஓட்டங்களையும், ட்ரொட் 133 பந்துகளை எதிர்கொண்டு ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 44 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது மட் பிரையர் 68 பந்துகளில் 27 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்து வீச்சில் இஷாந் சர்மா, ரவீந்திர ஜடோஜா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதேவேளை, இந்த ஆட்டத்தைப் பொறுத்த வரையில் இங்கிலாந்து அணி இப்போட்டியை சமநிலைப்படுத்தினால் போதும், இந்திய மண்ணில் 28 ஆண்டுகளின் பின்னர் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிவிடலாம் என்ற வகையில் ஆடி வருவதாக கிரிக்கெட் வல்லுநர்கள் விமர்சனம் தெரிவிக்கின்றனர்.



நாளைக் கடத்தும் வகையில் அனைத்து வீரர்களும் இந்திய அணியின் பந்து வீச்சை தடுத்து ஆடுகின்றனரே ஒழிய ஓட்டங்களைக் குவிக்கும் வகையில் இங்கிலாந்து அணி வீரர்களின் ஆட்டம் அமையவில்லை எனக் கருதுகின்றனர்.

இது இங்கிலாந்து அணிக்கு சில நேரங்களில் ஆபத்தை விளைவிக்கும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# நடால் ரெடி



(மாட்ரிட்)

அபுதாபி ரென்னிஸ் தொடரில் ஸ்பெயினின் நடால் பங்கேற்கவுள்ளார்.


ரென்னிஸ் அரங்கில் முதல்-4 இடத்தில் உள்ளார் ஸ்பெயினின் நடால் (வயது-26). இதுவரை 11 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற இவர், இடது முழங்கால் காயம் காரணமாக, விம்பிள்டன், யு.எஸ். ஓப்பன், லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கவில்லை.

சமீபத்தில் பயிற்சியை தொடங்கிய இவர், அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிசில் பங்கேற்க மாட்டார் என அறிவிக்கப்பட்டது. இப்போது, திடீர் திருப்பமாக, அபுதாபி ஓப்பன் ரென்னிசில் கலந்து கொள்ள உள்ளார். இது குறித்து வெளியிட்டுள்ள இணையத்தள செய்தியில், இந்த மாத இறுதியில் நடக்கவுள்ள, அபுதாபி தொடரில் பங் கேற்கவுள்ளேன். இத்தொடரில், ஏற்கனவே இரண்டு (2010, 2011) முறை கோப்பையைத் வென்றுள்ளேன். இம்முறையும் இத்தொடரை கைப்பற்றுவேன் என்றார்.

# விளையாட்டுச் செய்திகள்

## சுனாமி நினைவு மென்பந்து கிரிக்கெட் கிண்ணம் வென்றது விநாயகர் அணி





(மாதகல்)

சுனாமி நினைவாக மாதகல் கிழக்கு பீனிக்ஸ் இளைஞர் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் விநாயகர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

அணிக்கு ஒன்பது பேர் கொண்ட இம்மென்பந்து கிரிக்கெட் போட்டி 10 ஓவர்களைக் கொண்ட தொடராக இடம்பெற்றது.

மாதகல் பிரதேசத்தைச் சேர்ந்த பல அணிகள் பங்குகொண்டபோதும், இதன் இறுதிப் போட்டியில் விநாயகர் அணியும், சென். தோமஸ் யூத் அணியும் மோதின.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 9ஆம் திகதி மாதகல் பீனிக்ஸ் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய விநாயகர் அணி 10 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயந்தன் 39 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிரேம் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 70 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். தோமஸ் யூத் அணி 6.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பிரேம் மாத்திரம் 17 ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களைப் பெற்று ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் ஜெயந்தன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டித் தொடரில் 173 ஓட்டங்களையும், 13விக்கெட்டுக்களையும் பெற்றுக்கொண்ட விநாயகர் அணியின் ஜெயந்தன் போட்டியின் தொடர் நாயகன், ஆட்டநாயகன் விருதை வென்றார். இப்போட்டி நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிர்தேச அமைப்பாளர் ஜீவா, காந்திஜி சனசமூக நிலையத்தலைவர் துரைசிங்கம் அதன் விளையாட்டுக்கழகத் தலைவர் அருமைத்துரை ஆகியோர் கலந்துகொண்டதுடன் கிண்ணங்களையும் வழங்கி வைத்தனர். (54)

## யாழ்ப்பாணத்தில் கடற்கரை கரப்பந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடற்கரை கரப்பந்தாட்டத்தை வளர்க்கும் நோக்கிலும், இதில் சிறந்த வீர,வீராங்கனைகளை உருவாக்கும் வகையிலும் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் மாவட்ட அளவிலான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடர் ஒன்றை இந்த மாத பிற்பகுதியில் காரைநகர் கடற்கரையில் முதன் முறையாக நடத்த யாழ். கரப்பந்தாட்டச் சங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கான வேலைகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்போட்டித் தொடரில் ஒரு கழகத்தில் இருந்து ஒரு அணி மட்டுமே பங்குபற்ற முடியும் எனவும், பங்குபற்ற விரும்பும் அணிகளை உரிய முறையில் தயார்படுத்தி, போட்டிக் களத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மூலம் நீண்ட காலக் கனவு நிறைவேற்றப்படும் எனவும், கடற்கரை கரப்பந்தாட்டத்தில் சாதிக்க நினைத்த வீரர்களுக்கு பெரும் களமாகவும் இது அமையப் பெறவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## அடுத்த வருடம் இறுதிப் போட்டிகள்

(நெல்லியடி)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் நடுப்பகுதியில் நடைபெறும் என வலயக் கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வயது அடிப்படையில் இடம்பெற்ற இப்போட்டித் தொடரில் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ள அணியின் விபரம் வருமாறு 14 வயதுப் பிரிவில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி மோதவுள்ளது. இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும், அல்வாய் றோ.க.வித்தியாலய அணியும் மோதவுள்ளன.

16 வயதுப் பிரிவின் இறுதிப் போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து அல்வாய் றோ.க. வித்தியாலய அணியும், மூன்றாமிடத்திற்கான போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணியும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் மோதவுள்ளன. (93)

## மட்டுவில் மோகனதாஸ் கரப்பந்து இறுதிப் போட்டிக்கு அணிகள் தகுதி

(மட்டுவில்)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தினால் இரு பிரிவுகளில் கரப்பந்தாட்டப் போட்டி நடத்தப்பட்டு வந்தது. இதில் மாவட்ட அணிகளுக்கிடையிலான ஒரு போட்டித் தொடரும், தென்மராட்சிப் பிரதேச மட்டத்திலான மற்றுமொரு போட்டித் தொடருமாக நடத்தப்பட்டு வந்தது.

இதில் ஏற்கனவே, நடைபெற்ற மாவட்ட மட்ட அரையிறுதிப் போட்டியில் நீர்வேலி ஐக்கிய அணியும், பிரதேச மட்ட அரையிறுதியில் மட்டுவில் ஐங்கரன் அணியும் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றிருந்தன.

இந்நிலையில் ஏனைய இரண்டு அரையிறுதி ஆட்டங்கள் கடந்த 10ஆம் திகதி மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மாவட்ட மட்டத்திலான அரையிறுதியில் அச்சுவேலி ஸ்ரார் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதியது. இதில் ஆரம்பம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய புத்தூர் கலைமதி அணி 25-19, 25-22, 25-16 என்ற நேர் செட் கணக்கில் அச்சுவேலி ஸ்ரார் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. இறுதிப் போட்டியில் நீர்வேலி ஐக்கியம் அணியை புத்தூர் கலைமதி அணி எதிர்கொள்ளவுள்ளது.

பிரதேச மட்ட அரையிறுதிப் போட்டியில் மட்டுவில் வளர்மதி அணியும், கைதடி வளர்மதி அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மட்டுவில் வளர்மதி அணி 25-18, 25-21, 25-17 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. இறுதிப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணியை எதிர்த்து மட்டுவில் வளர்மதி அணி மோதவுள்ளது.

இவ்விரு இறுதிப் போட்டியும் எதிர்வரும் 20ஆம் திகதி மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர். (93, 118)


## முதல் டெஸ்ட் இன்று

(சிட்னி)

அவுஸ்ரேலியாவுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், அவுஸ்ரேலிய அணிக்குமிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளது.

இரு அணிகளுமே சமபலம் கொண்டுள்ளமையால் இப்போட்டி பெரும் விறுவிறுப்பாக இடம்பெறும் அதேவேளை, வெற்றி தோல்வியை நிர்ணயிக்கக்கூடிய ஆட்டமாகவும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடரை சொந்த மண்ணில் இழந்துள்ள நிலையில், அவுஸ்ரேலிய அணி இத்தொடரை வென்று தமது வெற்றிப் பயணத்தை மீண்டும் ஆரம்பிக்கும் என அதன் ஆதரவாளர்களால் நம்பப்படுகின்றது.



இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தேசிய மட்டக் கராத்தேப் போட்டியில் பங்குபற்றி பதக்கம் வென்ற சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள் கடந்த சனிக்கிழமை கல்லூர்ரி சமூகத்தினால் கௌரவிக்கப்பட்டனர். இதில் பதக்கம் வென்றோருடன் கல்லூரி அதிபர் அருட்திரு. ஞானப்பொன்ராஜ், பொறுப்பாசிரியர் நிசான் மற்றும் பயிற்றுநர் சென்சே. விஜயராஜ் ஆகியோர் நிற்பதைக் காணலாம். (எஸ்.பி)



# பிரதம நீதியரசரின் பதவிநீக்கம் ஏறக்குறைய நிறைவேறிவிட்டது

எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.

கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான விசாரணைகளை மேற்கொண்ட நாடாளுமன்ற தெரிவுக் குழு தமது விசாரணையின் போது சுமார் 1000 பக்கங்களை கொண்ட குற்ற விவரங்களுக்கு ஒரு நாளில் பதிலளிக்க வேண்டும் என்று அவர் பணிக்கப்பட்டார் என்றும் தெரிவுக் குழுவின் இரண்டு உறுப்பினர்கள் பொருத்தமற்ற வார்த்தைகளால் அவரை விளித்துப் பேசியதாகவும் அதனால் அவர் தெரிவுக் குழு விசாரணையில் இருந்து வெளிநடப்பு செய்ததாகவும் அவரது சட்டத்தரணிகள் கூறியிருக்கின்றனர்.

அவரது நடவடிக்கை அரசாங்கத்திற்கு எதிரான பலரது பாராட்டை பெற்றிருக்கிறது. தொடர்ந்தும் போராடுமாறு அவர்கள் பல்வேறு இணையத் தளங்களை பாவித்து கூறுகிறார்கள். ஆனால் அந்த போராட்டத்தின் விளைவு-களை அனுபவிக்கப் போவது கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவும் அவரது குடும்பத்தினரும் மட்டுமே. பொன்சேகாவையும் பலர் பாராட்டினார்கள். ஆனால் பாராட்டியவர்கள் தேர்தல்களின் போது அவருக்கு வாக்களிக்க முன்வரவில்லை. இன்று அவர் தனிமையடைந்து இருக்கிறார்.

நம்பகத்தன்மையை உலகத்தார் முன் கேள்விக்குறியாக்குவது அவரது நோக்கமாகியிருக் கலாம். அந்த நோக்கம் ஓரளவிற்கு நிறைவேறியும் இருக்கலாம். அதேவேளை தெரிவுக்குழுவின் எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் வெளி யேறியதால் அந்த நம்பகத் தன்மை சற்று கூடுதலாக பாதிக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால், வழமையாக உலகம் என்ன நினைக்கிறது என்பதை அரசாங்கம் அவ்வளவு பொருட்படுத்துவ தில்லை. அதனை முற்றிலும் புறக்கணிக்கவும் இல்லை. அதனால்தான் பதவியில் இருந்து ராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி, வெளிநடப்பின் பின்னர் பிரதம நீதியரசருக்கு தூது அனுப்பியதாகக் கூறப்படுகிறது. அதேவேளை எது நடந்தாலும் அவரைப் பதவியில் இருந்து தூக்கியெறிவது தான் அரசாங்கத்தின் பிரதான குறியாகவும் இருக்கிறது.

மூன்று குற்றச்சாட்டுக் களுக்கு பிரதம நீதியரசர் குற்றவாளியாக காணப்பட்ட தால் நேரத்தை வீணாக்காமல் பிரதம நீதியரசர் வெளிநடப்பு செய்தாலும் அவருக்கு எதிரான விசாரணைகளை மேற்கொண்ட நாடாளுமன்ற தெரிவுக் குழு தமது விசாரணையினை முடிவு செய்து மறுநாளே அறிக்கையையும் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கையளித்தது. ஆனால் வெளிநடப்பின் மூலம் தெரிவுக்குழு விசாரணையின் சில குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்படாமல் விடப்பட்டதாக அரசாங்கம் கூறுகிறது.

இந்த குற்றப் பிரேரணை ஏனைய சகல நீதியரசர்களையும் நீதி-பதிகளையும் அச்சத்திற் குள்ளாக்கியிருக்கும் என்றும் அவர்கள் இனி அரசாங்கத்திற்கு எதிரான வழக்குகளின் போது அரசாங்கத்திற்கு சாதகமான தீர்ப்புகளை வழங்க முற்படுவார்கள் என்றும் அது நீதித்துறையின் சுதந்திரத்தின் முடிவாகும் என்றும் சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகர கூறுகிறார்.

இலங்கையில் ஜனாதி-பதி ஒருவருக்கு எதிரான குற்றப் பிரேரணையின் போது உயர் நீதிமன்றமே விசாரணை நடத்துகிறது. அமெரிக்காவில் ஜனாதிபதிகளுக்கும் உயர் நீதியரசர்களுக்கும் எதிரான குற்றப்பிரேரணை குற்றச்சாட்டுக்களை செனட் சபை தான் விசாரிக்கிறது. இந்தியாவில் நீதியரசர்களுக்கு எதிரான குற்றப்பிரேரணை விசாரணைகளை மூன்று உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நடத்துகிறார்கள்.

இவை எல்லாவற்றையும் பார்க்கிலும் சிறந்த முறையொன்றை 2000ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமர்ப்பித்த அரசியலமைப்பு நகலில் இருக்கிறது. அதன் பிரகாரம் உயர் நீதியரசர்களுக்கு எதிரான குற்றப் பிரேரணை குற்றச்சாட்டுக்களை பொது நலவாய நாடுகளை சேர்ந்த மூன்று உயர் நீதிமன்ற நீதியரசர்களே விசாரிக்க வேண்டும்.

இன்று ஐக்கிய தேசிய கட்சி நீதியரசர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நாடாளுமன்ற தெரிவுக் குழு விசாரிக்கும் முறையை எதிர்த்தாலும் அக்கட்சியே அம்முறையை அறிமுகப் படுத்தியது. அந்த முறையில் 1984ஆம் ஆண்டு முன்னாள் பிரதம நீதியரசர் நெவில் சமரகோனுக்கு எதிராக விசாரணையையும் நடத்தியது. அப்போது அந்த முறையை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எதிர்த்தது.

இந்த தெரிவுக்குழு விசாரணை முறையை மாற்றியமைக்க அரசாங்கங்கள் முன்வருவதில்லை. சட்டமியற்றும் அரசாங்கங்களே நீதியரசர்களை தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்புகின்றன. எனவே சட்டத்தை வியாக்கியானம் செய்யும் நீதிபதிகளால் ஒன்றும் செய்ய முடியாது.

இந்தத் தெரிவுக் குழுவை நியமிக்கும் நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகள் சட்டங்களா என்பது தொடர்பாக தற்போது வழக்கொன்று உயர் நீதிமன்றத்தின் முன் இருக்கிறது. அவை சட்டங்களல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தால் தற்போதைய நிலைமையின் கீழ் அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ளுமா என்பது சந்தேகமே. நாடாளுமன்ற இறைமையின் படி ஏற்கனவே இந்த வழக்கையே சபா நாயகர் நிராகரித்துள்ளார். அவ்வாறாயின் ஏனைய விடயங்களில் அரசாங்கம் உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானங்களை எவ்வாறு ஏற்றுக்கொள்கிறது என்ற கேள்வி எழும்.

மறுபுறத்தில் பிரதம நீதியரசருக்கு எதிராக மேற்படி நிலையியல் கட்டளைகளின் கீழ் தெரிவுக்குழுவொன்று விசாரணை செய்து தீர்ப்பும் வழங்கியிருக்கும் நிலையில், அந்தக் கட்டளைகள் சட்ட விரோதமானது என்று அதே பிரதம நீதியரசரின் கீழான நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால் அது எந்தளவு நாகரிக மானது என்ற கேள்வியும் எழும். அதேவேளை சட்ட வியாக்கியானம் செய்யும் அதிகாரம் அந்த நீதிமன்றத்திற்கு மட்டுமே இருக்கிறது. எனவே இது புதிய சர்ச்சையையும் நெருக்கடியையும் உருவாக்கலாம்.




# ஜீன்ஸ் கதை...

பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றினாலும் இன்றைய நவநாகரிக உலகிலும் தனது தனித்தன்மையைக் கொண்டிருக்கும் ஒரே ஆடை - ஜீன்ஸ்!

இத்தாலி நாட்டின் ஜெனோவா நகரத்தில் கொர்ட்ரோய் எனப்படும் தடித்த, சொரசொரப்பான பருத்தி இழைகளைத் தயாரித்த தொழிற்சாலையில் ஜீன்ஸ் தோன்றியது. ஜீன் அல்லது ஜீயன் என்றுதான் ஆரம்பத்தில் அழைக்கப்பட்டது. இதனை இத்தாலிய முதலாளிகள் ஐரோப்பா முழுவதும் ஏற்றுமதி செய்தனர்.

இதனைத் தொடர்ந்து, பிரான்ஸிலுள்ள நிமே நகர் நெசவாளிகள் ஜீன்ஸ் போன்ற ஒருவகை இழையை உருவாக்கிப் பார்த்துத் தோற்றுப் போயினர். அந்த முயற்சியும் தோல்வியும் ஒரு புதுவிதமான ஜீன்ஸ் துணி - டெனிம் - உருவாகக் காரணமாக அமைந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஜீன்ஸ் தனது ஆதிக்கத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உருவாக்கியது. நீல வண்ண ஜீன்ஸ்களை அவர்கள் பெரிதும் விரும்பினார்கள்.

இதில் ஜேக்கப் டேவிஸ், கால்வின் ரோஜர்ஸ், லெவி ஸ்ட்ராஸ் ஆகியோர் 1873ஆம் ஆண்டுவாக்கில் விதவிதமான வடிவங்களில் ஜீன்ஸை வடிவமைத்தனர்.

ஆரம்பத்தில் குதிரைகளில் அமர்ந்து கால்நடைகளை மேய்ப்பவர்களால் (கௌபோய்) விரும்பி அணியப்பட்ட ஜீன்ஸ் ஆடைகள், பின்னர் அனைத்து இளைஞர்களையும் கவர ஆரம்பித்தன.

அமெரிக்கா வாழ் ஸ்பானிஷ்காரர்களையும் இந்த ஆடை விட்டுவைக்கவில்லை.

இடையில் சிறிது காலம் திரையரங்குகள், பள்ளிக்கூடங்கள், உணவு விடுதிகளில் ஜீன்ஸ் ஆடைக்குத் தடைகள் விதிக்கப்பட்டன.

சிறிது காலத்துக்குப் பிறகு மக்களின் ஆடையாக இதே ஜீன்ஸ் மகுடம் சூட்டிக் கொண்டது.



# பிரபஞ்சத்தின் பிறந்த தினம்

பிரபஞ்சம், இது ஒரு தனிமைமிக்க இடம் தான். பிரபஞ்சவெளி மிகமிகப் பெரியது, சூனியமானது. பிரபஞ்சம் இடைவிடாமல் விரிந்துகொண்டே செல்கிறது. இது எப்போது பிறந்தது? பிறந்திருக்கவே வேண்டியது இல்லை என சில வானியலாளர்கள் கருதுகின்றனர். பிரபஞ்சத்தின் உருவம் எப்படி? நீங்கள் ஒரு கண்ணாடி முன் நிற்கிறீர்கள். அதனுள்ளே உங்கள் உருவம் தெரிகிறது. அதற்குள் இன்னொரு கண்ணாடி. அங்கும் உங்கள் உருவம். அதற்குள்ளும் இன்னொரு கண்ணாடி. இன்னொரு கண்ணாடி, இப்படியாக போய்க் கொண்டே இருந்தால்... என்ன தலை சுற்றுகிறதா! இதுதான் பிரபஞ்சம். ஒவ்வொரு நாளும் விண் மீன்களில் உருவெடுக்கும் ஐதரசன் பிரபஞ்சத்தை நிறைத்துக்கொண்டேயிருக்கிறது. இது விண்மீன் களுக்கிடையே பரவுகிறது. இடை இடையே அண்டங்கள் வயதாகி இறக்கின்றன, விலகியும் செல்கின்றன, தொடர்ந்து புதிய அண்டங்கள் பிறந்துகொண்டேயிருக்கின்றன பில்லியன் கணக்கில். என்ன சொல்லலாம் இதை? ஒவ்வொரு நாளும் பிரபஞ்சத்தின் பிறந்த நாள் தான்...

# நகம் கடித்தல்

இது ஒரு நோயல்ல. பழக்கத்தில் வருவது. பொறுமை இல்லாமல் இருந்தாலோ, பொழுது போகாமல் இருந்தாலோ நகம் கடிப்பார்கள். இது குழந்தைகள் முதல் பெரியோர் வரை அனைவரையும் பாதிக்கும்.

நகத்தைக் கடிப்பதால் நகம் மொட்டையாகி கோணலாகி அழகிழந்து காணப்படும். நகம் ஒழுங்கில்லாமல் இருந்தாலும், அதைச் சரி செய்துவிடலாம் என்று சிலர் நகம் கடிப்பார்கள். கட்டை விரல் நகத்தைக் கடிப்பவர்கள்தான் அதிகமாக இருப்பார்கள். வேறு சிலர் பத்து நகங்களையும் பார்த்துப் பார்த்துக் கடிப்பார்கள். ஆண்களைவிட பெண்களே அதிகம் நகம் கடிப்பார்கள்.

நகம் கடிப்பவர்களுக்கு நகம் கடிக்காமல் இருக்க சில ஆலோசனைகள் இங்கே -

- நகம் கடிப்பதை வெறுக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.
- கண்ணாடி முன் நின்று நகம் கடிக்கும்போது உங்கள் முகபாவங்கள் எப்படியெல்லாம் மாறுகின்றன என்று பாருங்கள்.



- ஒவ்வொரு நாளும் நகம் கடிப்பது எங்கே, எப்போது, எப்படி, யாருடன் இருக்கும்போது நடக்கிறது என்பதைக் குறித்து வைத்து அவற்றைத் தவிர்க்க முயலுங்கள்.
- நகத்தை ஒட்ட நறுக்கி விடுங்கள்.
- நகம் கடிக்க எண்ணம் வரும்போது கைகளுக்கு வேறு வேலை கொடுங்கள்.
- எலுமிச்சம்பழச்சாறு, மிளகுத் தண்ணீர், வேப்பெண்ணெய் இவற்றில் ஒன்றில் கைவிரல்களை நனைத்து வையுங்கள்.
- கையுறை அணிந்து கொள்ளுங்கள்.
- கைவிரல்களில் மோதிரம் அணிந்து அதனைப் பிறர் பார்க்கும் வண்ணம் கைகளை வெளியில் வைத்துக் கொள்ளுங்கள். பார்ப்பவர்கள் மோதிரத்தை மட்டும் பார்க்காமல் விரல் நகத்தையும் பார்ப்பார்கள் என்ற பயமிருக்கும்.



# சினிமா சினிமா

◗ தன்னுடைய அதிரடியான ஆக்ஷன் படங்கள் மூலம் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களைப் பெற்ற ஜாக்கிசான், "இனி ஆக்ஷன் படங்களில் நடிக்க மாட்டேன்" என அறிவித்திருக்கிறார். "அறுபது வயதை நெருங்கிக்கொண்டிருக்கிறேன் இதுவரை ஆக்ஷன் காட்சிகளில் உயிரைக் கொடுத்து நடித்திருக்கிறேன். உடலில் 300இற்கும் அதிகமான எலும்புகள் உடைந்து அதற்காக சிகிச்சை எடுத்துள்ளேன். இதுவே போதும் என நினைக்கிறேன். ஆனாலும் என்னுடைய ரசிகர்களுக்காக இன்னும் பத்து படங்களில் செய்ய வேண்டிய ஆக்ஷனை என்னுடைய 101ஆவது படமான CZ-12 படத்தில் செய்துள்ளேன்" எனக் கூறியுள்ளார்.

◗ கடல் படத்தில் அறிமுகமாகியுள்ள கார்த்திக்கின் மகன் கவுதம், கிறிஸ்தவ இளைஞராகவும், ராதாவின் மகள் துளசி, இந்துப் பெண்ணாகவும் நடித்துள்ளனர். கார்த்திக், ராதாவின் முதல்படமான அலைகள் ஓய்வதில்லையில் கார்த்திக் இந்துவாகவும் ராதா கிறிஸ்தவபெண்ணாகவும் நடித்திருந்தனர். கடலோர காதலைச் சொல்லும் கடல் படத்தில், அர்ஜுன், அரவிந்த்சாமி இருவரும், காதலர்களுக்கு உதவி செய்யும் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

◗ "முனி", "முனி-2" (காஞ்சனா) வெற்றிப் படங்களுக்கு பிறகு ராகவா லாரன்ஸ் "முனி-3" படத்தை இயக்கி நடிக்கிறார். "காஞ்சனா"வில் கதாநாயகியாக நடித்த லட்சுமி ராய், "முனி-3" இலும் தான்தான் கதாநாயகி எனக் கூறி வந்தார். ஆனால் ராகவா லாரன்ஸோ, ஒரே நேரத்தில் தமிழிலும் தெலுங்கிலும் படத்தை உருவாக்குவதால் இரண்டு மொழி ரசிகர்களுக்கும் நன்கு பரிச்சயமான நடிகை நடித்தால்தான் பொருத்தமாக இருக்கும் என்று கூறி டாப்ஸியைக் கதாநாயகி ஆக்கிவிட்டார்.



◗ வஸந்தின் "மூன்று பேர் மூன்று காதல்" படத்தில் அர்ஜுன், சேரன், விமல் ஆகியோர் இணைந்து நடிக்கிறார்கள். கதாநாயகிகளாக புதுமுகங்கள் சுர்வீன், லாசினி, "தாமிரபரணி" பானு ஆகியோர். "ரிதம்" படத்தில் பஞ்சபூதங்களான நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு பாடல்களை அமைத்த வஸந்த், இந்தப் படத்தில் ஐந்திணைகளுள் மூன்றான குறிஞ்சி (மலையும் மலை சார்ந்த இடமும்), நெய்தல் (கடலும் கடல் சார்ந்த இடமும்), மருதம் (நிலமும் நிலம் சார்ந்த இடமும்) ஆகியவற்றை மையமாகக் கொண்டு படத்தையும் பாடல்களையும் உருவாக்கியிருக்கிறார். நா.முத்துகுமாரின் வரிகளுக்கு யுவன்ஷங்கர் ராஜா இசையமைத்திருக்கிறார்.

◗ ஹொலிவுட்டின் முன்னணி நட்சத்திர நாயகி ஏஞ்சலினா ஜோலி. இரண்டு முறை திருமணமாகி விவாகரத்து பெற்ற இவர், 2005 முதல் ஹொலிவுட்டின் பிரபல ஹீரோ பிராட் பிட்டுடன் "லிவிங் டுகெதர்" பாணியில் வாழ்ந்து வருகிறார். 37 வயதான இவருக்கு 3 குழந்தைகள் உள்ளனர். தவிர 3 குழந்தைகளை தத்தெடுத்து வளர்த்து வருகிறார்.



இப்போதும் முன்னணி நாயகியாக உள்ள ஏஞ்சலினா, திடீரென இனி நடிக்கப் போவதில்லை என அறிவித்திருக்கிறார். காரணம் கேட்டால்... "எனது குழந்தைகளைக் கவனிக்க போதுமான நேரம் இல்லை; எனவே சினிமாவை விட்டு விலகி அவர்களை நல்ல முறையில் வளர்க்க விரும்புகிறேன். அவர்கள் தங்கள் தேவையை தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் வரை சினிமாவில் நடிக்க மாட்டேன்" என்கிறார்.

◗ கடற்பரப்பில் பல சாகசங்களுக்கிடையே நடைபெறும் காதல் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டு கவிஞர் வைரமுத்து எழுதிய "தண்ணீர் தேசம்" நாவல், அதே பெயரில் திரைப்படமாக உருவாகிறது. கன்னடத்திலும் தெலுங்கிலும் தலா இரண்டு படங்களை இயக்கிய ஷிவன் இந்தப் படத்தை இயக்குகிறார். படத்தின் வசனத்தையும் பாடல்களையும் வைரமுத்து எழுதுகிறார். "எங்கேயும் எப்போதும்" படத்துக்கு இசையமைத்த சத்யா இசையமைக்கிறார்.

# பேராசை

ஒருவன் தவம் செய்து இறைவனிடம் தன் ஆசைகளையெல்லாம் நிறைவேற்ற ஓர் ஆள் வேண்டும் என்று கேட்டான்.

அதற்கு இறைவன், "நீ கேட்ட வரத்தைத் தருகிறேன். ஆனால், நீ அவனுக்குத் தொடர்ந்து ஏதாவது வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். இல்லையென்றால் அவன் உன்னை விழுங்கி விடுவான்..." என்றார்.

அவனும் சரியென்று சம்மதித்தான்.

உடனே இறைவன் அவனுடன் ஒரு பூதத்தை அனுப்பி வைத்தார்.

பேராசை கொண்ட அவன், அந்த பூதத்திடம், "எனக்கு இந்த நாட்டு அரசன் வசிப்பதை விடப் பெரிய அரண்மனை ஒன்று வேண்டும்" என்றான்.

கண் மூடிக் கண் திறப்பதற்குள் அழகிய அரண்மனை ஒன்றைக் கட்டிக் கொடுத்தது பூதம்.

அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

மேலும், மேலும் அவன் ஆசைப்பட்டவற்றையெல்லாம் உடனுக்குடன் நிறைவேற்றிவிட்டு, "வேலை கொடு... வேலை கொடு... இல்லையென்றால் உன்னை விழுங்கி விடுவேன்" என்று பூதம் அவனை மிரட்ட ஆரம்பித்தது.

பூதத்துக்கு வேலை கொடுப்பதே அவனுக்கு வேலையாகி விட்டது. அவனால் முடியாமல் போய் மிகவும் சோர்வடைந்து போனான். பூதம் அவனை விரட்ட ஆரம்பித்தது.

மீண்டும் இறைவனிடம் ஓடினான்... "என்னைக் காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்..." என்று கதறினான்.


மனமிரங்கிய இறைவன், அவனை விரட்டி வந்த பூதத்திடம், "நான் சொல்லும் வரை இந்தப் படிகளில் ஏறி ஏறி இறங்கிக் கொண்டு இரு..." என்று கட்டளையிட்டார்.

பூதமும் இறைவன் சொன்னபடி, படிகளில் விடாமல் ஏறி, இறங்கிக் கொண்டேயிருந்தது.

பேராசைக்காரன் நிம்மதிப் பெருமூச்சு விட்டு தப்பித்தோம் பிழைத்தோம் என்று எண்ணியபடி, இறைவனை வணங்கிவிட்டுச் சென்றான்.

(அந்தப் பூதம் வேறு யாருமில்லை... நமது மனம்தான்... நமது மனம் நமக்குத் தேவையானவற்றை அடைய வழியைக் காட்டும். பேராசைப்பட்டால் நம்மையே அழித்து விடும்.)





# வெங்காய வைத்தியம்

- வெங்காயம் வாயுவைச் சமப்படுத்தும், பித்தத்தைப் போக்கும்.
- வெங்காயத்தை பச்சையாகத் தின்று வந்தால் பற்கள் பலம்பெறும். ஈறுகளிலுள்ள கிருமிகள் சாகும். பற்களில் படும்படி கடித்துத் தின்று வந்தால் பல்வலி குணமாகும்.
- வெங்காயத்தை அரைத்து தேன், கற்கண்டு கலந்து உண்ண உடல் பலம் கூடும்.
- வெங்காயப் பூவை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் கண் பார்வை தெளிவுபடும்.
- வெங்காயச் சாற்றுடன் தேன் கலந்து சாப்பிட்டால் சீதபேதி குணமாகும்.
- குளவி அல்லது தேனீ கொட்டிவிட்டால் அக்கடிவாயில் வெங்காயத்தை தடவினால் விஷம் நீங்கும்.
- வெள்ளை வெங்காயத்தை நெய்யில் வதக்கிச் சாப்பிட்டு வந்தால் மூலநோய் குணமாகும்.
- வெங்காயச் சாற்றுடன் மருதாணி, சீரகம் சேர்த்து அரைத்துப் பூசினால் தேமல், படை முதலியவை குணமாகும்.
- வெங்காயத்தை வெல்லத்துடன் சேர்த்துச் சாப்பிட்டால் பித்தத்தால் உண்டாகும் வாய்க்கசப்பு நீங்கும்.

வாரம் ஒரு கிராமம்



# கல்விச் சிறப்பு மிகு கரவை

கரவெட்டி என்பது பல குறிச்சிகளை உள்ளடக்கிய பெருநிலப்பரப்பாகும். ஆரம்பகாலத்தில் இயற்கையான துரவுகுளம் இருந்த பிரதேசங்களில் மக்கள் குடியேறினர். அந்த வகையில் காரைப்பற்றைகள் நிறைந்து காணப்பட்ட வெளிப்பிரதேசத்தில் தங்களின் வாழ்வாதாரங்களை அமைக்கும் நோக்குடன் காரைப்பற்றைகளை வெட்டி, மக்கள் குடியேறி வாழ்ந்த இடம் காரைவெட்டிப் பிரதேசம் என அழைக்கப்பட்டு, பின் மருவி கரவெட்டி என அழைக்கப்பட்டதாக பெரியோர் கூறுகின்றனர். இருப்பினும், அறிவியல் பர்வமாகவும் விஞ்ஞான ரீதியாகவும் இதற்கு வேறு காரணங்கள் உண்டு.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் பிற்காலத்தில் எழுதிய கட்டுரைஒன்றில் ஒல்லாந்தர் காலத்தில் "கெரவிட்" (கேவளை) என அழைக்கப்பட்டது. பின் மருவி கரவெட்டி என அழைக்கப்பட்டதாக உள்ளது.

கரவெட்டியின் சிறப்பு என்று சொல்லப்படும் போது முற்காலத்தில் வாழ்ந்த மக்கள் சுயநலம் அற்ற சமூக நோக்குடன், சைவ ஆசாரத்தை மிக ஒழுங்காகவும் இறுக்கமாகவும் கடைப்பிடிப்பவர்களாக வாழ்ந்தார்கள். அவர்களுடைய பிரதான தொழில் விவசாயம், மந்தை வளர்ப்பு பனம் பொருள் உற்பத்திகள் ஆகியவற்றை குறிப்பிடலாம். நன்னீருக்கு மிகத் தட்டுப்பாடான சவர் நிலப்பகுதிகளில் குடியேறிக்கொண்டு, நன்னீர் பிரதேசங்களை விவசாயத்திற்காக ஒற்றுமையுடன் பகிர்ந்து பயன்படுத்தினர்.

இவர்களுடைய சமூகச் சிறப்பையும் சமூக ஒழுங்கையும் சரியாகவும் ஒழுங்காகவும் நெறிப்படுத்தியவர்களில் சேது நிலையிட்ட மாப்பாண முதலியார் பரம்பரையைச் சேர்ந்த வீரபாகு சிற்றம்பலம் (சித்த மணியப்பா) அவர்களைக் குறிப்பிடலாம். இவர் பல ஆலயங்களை ஆகம முறைப்படி மக்கள் வழிபடக் கூடிய வகையிலும், சைவ ஆசாரத்தை சிறந்த முறையில் கடைப்பிடிக்கக் கூடிய வகையிலும் இந்தியாவின் வேதாரணியத்தில் இருந்து அழைத்து வரப்பட்ட சைவகுருமார்களைக் கொண்டு கிரியைகளைச் செய்வித்தார்.

மக்களின் மதமாற்றத்தை தடுக்கவும், அவர்கள் கல்வி அறிவு பெறுவதற்கும் மாணிக்கவாசகர் வித்தியாலயம்(ஆண்கள் பாடசாலை), சரஸ்வதி வித்தியாலயம் (பெண்கள் பாடசாலை), விக்கினேஸ்வராக் கல்லூரி (ஆங்கில பாடசாலை), விநாயகர் வித்தியாலயம் (கலவன் பாடசாலை) ஆகிய பாடசாலைகளை உருவாக்கி, இப்பிரதேசத்தைசேர்ந்த மக்களும் பிற பிரதேசத்தை சேர்ந்த மக்களும் மிஷனரிகளை நம்பியிராமல் சைவப் பாரம்பரியத்தைப் பேணி, கல்வி கற்க வழி சமைத்தார். இதுவே கரவையின் உடைய சமூகச் சிறப்பும் ஏனையவர்களால் மிதந்து பேசக்கூடியவாறு இருந்தமைக்கும் காரணமாகும்.

சித்தமணியப்பாவைப் போன்று கரவெட்டியில் உள்ள மக்கள் தமது வாழ்வாதார வசதிகளை இப்பிரதேசத்தில் சிறப்பாகப் பெறவேண்டிய நோக்குடன், சமூக நோக்கோடு சமூக ஆர்வலர்கள் அந்தந்தக் காலங்களில் காலத்தின் தேவைக்கேற்ப பல வசதிகளை செய்து கொடுத்துள்ளனர். இவற்றை ஆரம்பகாலத்தில் இருந்து நோக்குவோமாயின், கரவையின் எல்லைப் புறங்களில் 7 மடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சுமைதாங்கிகள் அமைக்கப்பட்டன. வைத்தியசாலைகள், பொதுக்கிணறுகள் என மக்களின் தேவைகளுக்கேற்றவாறும் கரவெட்டியின் சமூக பெரியவர்களால் புலம்பெயர் மக்களின் உதவியுடன் பல்வேறு மாற்றங்களை தன்னுள் வாங்கி... வளர்ந்து சிறப்புப் பெற்ற பெரும் கிராமமாக இன்று மிளிர்ந்து நிற்கின்றது.

கரவை வாழ் மக்களின் தாகம் தீர்க்கும் நீர்த்தாங்கி




கரவையூர் பிரதேச வைத்தியசாலை



வளமான பயிர்ச் செய்கை நிலம்




வெல்லன் விநாயகர் ஆலயம்.





தாழங்குழி முருகன் கோவில் குளம்

தேவாலயம்



சோனப்பு இந்து மயானம்



### - 2013இல் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் -

# யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகள் ஆளுநருடன் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகரக பிரதிநிதி மைக்கேல் சுவாக் தலைமையிலான குழுவினர் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் கடந்த 10ஆம்திகதி சந்தித்து கலந்துரையாடினர்

2013ஆம் ஆண்டு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினால் வட மாகாணத்தில் முன்னெடுக்கப் படவுள்ள செயற்திட்டங்கள் தொடர்பாக யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகளினால் ஆளுநருக்கு எடுத்துரைக்கப்பட்டதுடன் ஆளுநருக்கு நன்றியும் தெரிவித்துக் கொண்டனர்.

இதன்போது வட மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்கள் என்பன தொடர்பாக ஆளுநரினால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

# மிகுதிப்பணத்தை வழங்க மறக்கும் நடத்துநர்கள்

(கிளிநொச்சி)

ஏ-9 பிரதான வீதியில் பயணிகள் சேவையில் ஈடுபடும் அரச, தனியார் பேருந்துகளின் நடத்துநர்கள், பயணிகளுக்கு மிகுதிப் பணத்தை வழங்குவதில்லையென பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி டிப்போசந்திவரையான பயணக்கட்டணமாக 96 ரூபா அறவிடப்படுகிறது. ஆனால் யாழிலிருந்து, கிளிநொச்சி நீதிமன்றம் வரையான அரச நிர்ணயக் கட்டணம் 92 ரூபா ஆகும். ஆனால் நீதிமன்றுக்குசெல்லும் பயணிகளுக்கும் 96 ரூபாவினையே கட்டணமாக அறிவிடும் நடத்துநர்கள் மிகுதிப்பணத்தை கொடுக்க மறந்து விடுகின்றனர்.

எனவே பயணிகளுக்கான மிகுதிப்பணத்தை நடத்துநர்கள் வழங்குவதுடன் அரச, தனியார் பேருந்துகளின் மாறுபட்ட கட்டண அறவீடுகளும் தவிர்க்கப் படவேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.(142)

# வலித்தூண்டல் மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

(சண்டிலிப்பாய்)

கீரிமலை-வலித்தூண்டல் பகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்கு 12 கட்டுமரங்கள், வலைகள், வெளியிணைப்பு இயந்திரங்கள் என்பன கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன. இவைஒவ்வொன்றினதும் பெறுமதி மூன்றேமுக்கால் இலட்சம் ரூபாவாகும். வலி. வடக்கு பிரதேச சபை எதிர்கட்சித்தலைவரும் பிரதேச அமைப்பாளருமான ஜெயபாலசிங்கம் (அன்பு) தலைமையில் இடம் பெற்றநிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தெல்லிப்பளைப் பிரதேச செயலர் சிறிமோகன் மற்றும் வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவரும் ஈ.பி.டி.பியின் வலிகாமம் அமைப்பாளருமான பாலகிருஸ்ணன் (ஜீவன்) ஆகியோர் மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

மேற்படி நிகழ்வில் வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் திருஞானம், வலி. தெற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவர் அரிகரன், வலி. தெற்கு பிரதேச சபை உறுப்பினர் இராஜசேகரம், தெல்லிப்பளை பிரதேச செயலக உதவித்திட்டப்பணிப்பாளர் இராஜசேகரம், கடற்றொழில் நீரியல்வள திணைக்களப் பணிப்பாளர் கணேசமூர்த்தி உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# சுகாதார சீர்கேடு நிறைந்த முறிகண்டி பொது மலசலகூடம்

### - சுட்டிக்காட்டியும் பயனில்லை

(கரணவாய்)

திருமுறிகண்டிப் பிள்ளையார் கோவில் பகுதியில் அமைந்துள்ள பொது மலசலகூடம் மிகவும் அசுத்தமான நிலையில் காணப்படுவதாகவும் இதனால் ஆலயசூழலில் புனிதத்தன்மை சீர்கெடுவதாகவும் அப்பகுதிப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் பொலித்தீன் பைகள், சுருட்டு, பீடி போன்றன குப்பைகளாக காணப்படுவதுடன், மிகவும் துர்நாற்றம் வீசுவதாகவும் இதனால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் பயணிகள் மிகவும் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக தண்ணீர்ப் பைப்புகள் மற்றும் மலசலகூட குழிகள் உடைந்தும் சேதமடைந்தும் காணப்படுகின்றன. இவ்விடயம் தொடர்பாக பல தடவை பத்திரிகைகளில் சுட்டிக்காட்டப்பட்டும் சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயங்களைக் கவனியாது அசமந்தமாக இருப்பதாகத் தெரிவிக்கும் மக்கள், சம்பந்தப்பட்ட பிரதேசசபை திருத்த வேலைகளில் கவனம் செலுத்தினால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் ஓரளவு நிவர்த்தியாகும் எனத் தெரிவிக்கின்றனர். மழை காலங்களில் அங்கிருக்கும் கடைகளுக்கு முன்னால் வெள்ள நீர் தேங்குவதனால் பயணிகள் சொல்லொணா வேதனைகளுக்கு உள்ளாகின்றனர்.எனவே இது தொடா பாக சம்பந்தப்பட்டவர்கள் உடன் கவனத்தில் எடுத்து தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

(18)



யாழ்ப்பாணம் - பொம்மைவெளியில் மீள்குடியேறியுள்ள 40 குடும்பங்களுக்கு கொழும்பிலுள்ள அமீர் பௌண்டேஷனினால் கிடுகுகள் வழங்கப்பட்டன. வை.எம்.எம்.ஏ. முன்னாள் தலைவர் எம்.எஸ். ரஹீமின் முயற்சியினால் யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் தலைவர் எம். ஏ.நிலாம் தலைமையில் பதிவுகள் இடம்பெற்று, ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் எம். லாபீர் பயனாளி ஒருவருக்கு கிடுகுகள் வழங்குவதைக் காணலாம்.

(105)

# பதிவிறக்கப் பெட்டகம்

அணுவிஞ்ஞானம் என்பது ஆக்கத்தையும் அழிவையும் உள்ளடக்கியது என்றாலும், அதன் ஆக்கக்கூறைவிட அழிவிற்கான கூறுகளே அதிகம். ஒருவேளை அணுவை அதன் ஆற்றலை நம்மால் கட்டுப்படுத்தி, அதன் கதிர்வீச்சிலிருந்து மனித குலத்தை காப்பாற்ற முடியுமெனில் பிரச்சினையில்லை. அதற்கான உத்தரவாதம் இல்லை. எல்லாவற்றையும்விட, அரசின் அதிகாரத்தோடு அதற்கு உள்ள உறவே இங்கு முக்கியமானது. அணைகளை அதிகம் கட்டுவதும் அல்லது நீர்தேக்கங்ளை உருவாக்கும் இன்னும் பல ஆக்கப்பணிகளை செய்வதை விட்டு பலகோடி ரூபாய்களில் எதற்கு அணுஉலை என்றால் அதான் அதிகாரம். அணு ஆற்றலே இன்றைய உலகின் வல்லாண்மையை நிருபிப்பது. வளர்ச்சிதான் வாழ்க்கை என்று முடிவெடுத்தால், விவசாயம் உள்ளிட்ட பலவற்றை வளர்க்க வாய்ப்பு உள்ளது. ஆனால் அது முதலாளித்துவ வியபாரத்திற்கு சந்தைக்கு லாபமற்ற பணி. அணுஉலைகளுக்கு எதிராக அடுப்புஉலைகளை வளர்ப்பதற்கான முயற்சிகளே இன்றைய தேவை.

**- ஜமாலன்**

நுகர்வோரிடம் செல்லும் பொருட்களிலேயே புத்தகங்களைப் போல என்னுடைய தனிக் கட்டுப்பாட்டில் இருப்பவை வேறு எதுவும் இல்லை. முழுக்க முழுக்க! பதிவு செய்யப்பட்ட இசையில் கட்டுப்பாடு கிட்டும், ஆனால் அதை ரீமிக்ஸ் செய்து மாற்றி அமைக்க முடியும். புத்தகங்களை அப்படி மாற்ற முடியாது. பழங்காலம் போல வரிசை வரிசையாக வார்த்தைகளை அமைக்கிற மீடியம்தான் எனக்குத் தோதுப்பட்டு வருகிறது. நான் எழுதும்போது என்னைத் தவிர வேறு யாரும் அதில் நுழைவதில்லை. சினிமா, டெலிவிஷனுக்கு தயாரிப்பவர்களைப் பார்த்தால் எனக்குப் பிரமிப்பாகவே இருக்கிறது. அவர்கள் என்னத்தையெல்லாம் சகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது! புத்தகம் எழுதுவது, சுத்தம். இதில் மொத்த அனுபவத்தையும் கட்டி எழுப்புவது ஒரே ஆள்தான்.

**- வில்லியம் கிப்ஸன்**

அனுபவம் நம் அறிவை வளர்ப்பது உண்மைதான். ஆனால் நாம் தவறு செய்யும்போது தடுத்து நிறுத்துவதில்லை.

**- ஆல்டஸ் ஹக்ஸ்லி**

எந்தப் புத்தகமும், அது கொஞ்சமாவது நல்ல புத்தகமாக இருந்தால், யாரையாவது அவமதித்தே தீரும்.

**- தோமஸ் டிஷ்**

அதீத குடியினால் பாதிக்கப்பட்ட பேராசிரியர் விதிவிலக்கல்ல மாறாக அவரே விதி; என் தலைமுறைக்கு முந்தைய ஒரு தலைமுறை இந்திய நாட்டுப்புறவியல் பேராசிரியர்களில் முக்கால்வாசிப் பேர் மதுவுக்கு அடிமையாகி சீரழிவுக்கு உள்ளானவர்களே. தமிழ் சிறு பத்திரிகை உலகும் அகில இந்திய நாட்டுப்புறவியல் பேராசிரியர்கள் ஆராய்ச்சியாளர்கள் உலகும் அந்த வகையில் கிட்டத்தட்ட ஒரே வகையானதே ஆகும். வித்தியாசம் என்னவென்றால் பேராசிரியர்களை பத்திரமாக கவனித்துக் கொள்ள அவருடைய மாணவர்கள் இருப்பார்கள் என்பதுதான். இந்திய குரு சிஷ்ய பரம்பரையின் மதிப்பீடுகளெல்லாம் முழுமையாக உள்வாங்கப்பட்ட ஒரே இடம் பல்கலைக் கழகங்களின் ஆராய்ச்சித் துறைகள்தான். ஆராய்ச்சி வழிகாட்டியாக இயங்கும் பேராசிரியருக்கு ஆராய்ச்சி மாணவர்கள் கொத்தடிமைகளாய் தொண்டூழியம் செய்ய வேண்டும் என்பது மரபின் நீட்சி. ஷூவுக்கு பாலிஷ் போடுவது, காலணி உறைகளைத் துவைப்பது வீட்டு வேலை செய்வது என்பதிலிருந்து கல்விப்புல கட்டுரைகள் எழுதுவதில் ஒத்தாசை செய்வது என்பது வரை தொண்டூழியங்கள் எண்ணற்றவை. குடித்து விட்டு கீழே கிடக்கும் பேராசிரியர்களை அவர்கள் அறைகளில் கொண்டு சேர்ப்பது, உணவு ஊட்டி விடுவது, அவிழ்ந்த உடைகளை சரி செய்வது என பல வேலைகளும் குரு சிஷ்ய தொண்டூழியங்களின் பகுதிகளே. ஆய்வேடுகளின் தரத்தினால் அல்ல தொண்டூழியங்களின் சிரத்தையினாலேயே பெரும்பான்மையான ஆய்வுப்பட்டங்கள் பெறப்படுகின்றன. ராஞ்சி கருத்தரங்கில் என் நண்பர்-பேராசிரியரை அவருடைய மாணவர்கள் சிறப்பாக கவனித்துக்கொண்டதை நான் வெகுவாக பாராட்டிப் பேசினேன். கருத்தரங்கு முடிந்தபின் என்னை சந்தித்த அவருடைய மாணவி தலை எழுத்தே என்று செய்கிறோம் சார் என்று குட்டை உடைத்த போது மனமும் உடலும் வெகுவாக சோர்ந்துவிட்டன.

**- எம்.டி.முத்துக்குமாரசாமி**

# புதியகோணத்தில் தமிழாய்வை மேற்கொள்ள வேண்டியது அவசியம்

## தமிழ்நேசன் அடிகளார் வலியுறுத்து



(நெல்லியடி)

தமிழாய்வை புதிய தளங்களிலும், புதிய கோணங்களிலும் நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். தமிழ் மொழி இலக்கிய ஆய்வைப் பொறுத்தவரை நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒரு விடயம் உள்ளது. பொருளியல், வரலாறு, அறிவியல் போன்ற துறை சார்ந்த ஆய்வுகள் நாடனைத்திற்கும், பல மொழியினருக்கும் பொதுவானவை.

எனவே அவற்றின் தரம் பற்றி எவரும் அதிகம் கவலைப் படுவதில்லை. ஆனால் தமிழாய்வுகள் அனேகமாக தமிழ் பேசுபவர்களால்தான் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ் ஆய்வுகள் குறுகிய வட்டத்திற்குள் சுற்றிச் சுற்றி வருவதால் அவற்றின் தரம் பற்றி அடிக்கடி கேள்வி எழுப்பப்படுகின்றது என அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

கடந்த 8ஆம், 9ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வடமாகாண தமிழ் இலக்கியப்பெருவிழாவின் ஒரு பகுதியான "வடமாகாண தமிழ் இலக்கியத்தின் செல்நெறிகள்" என்ற தலைப்பில் இடம்பெற்ற ஆய்வரங்கின் இரண்டாம் நாள் "பேராசிரியர் கா. சிவத்தம்பி" அரங்கில் "மன்னார் மாவட்டத்தின் இலக்கிய முயற்சிகள்" என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து உரையாற்றும்போதே தமிழ்நேசன் அடிகளார் இவ்வாறு கூறினார்.

அடிகளார் தனது உரையில் தொடர்ந்து கூறியதாவது, ஆற்றின் வெள்ளம் மாற்றமின்றிச் செல்வதுபோல தோன்றினாலும், புதுப்புது வெள்ளங்கள் ஆற்றின் வாழ்க்கையை வளமாக்குகின்றன. புதுப்புதுக் கருத்துக்களை ஒரு மொழி ஏற்கும்பொழுது தான் அம்மொழி வளர்ச்சி பெறுகின்றது. மொழி என்பது தேங்கிக்கிடக்கும் ஏரியன்று. அது இடையறாது ஓடிக்கொண்டிருக்கும் ஆறு. இவ்வாறான மாநாடுகளின் புதிய ஆய்வுகள் புதிய முடிவுகள் தமிழுக்கு மேலும் வளம் சேர்ப்பதாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆய்வு என்ற சொல்லின் பொருள "ஏதேனும் ஒன்றை மிக்க கவனத்தோடும் விடா முயற்சியோடும் நுட்பமாய் தேடுவது" என்பதாகும். இங்கே ஏதேனும் ஒன்று என்பது புதிய மெய்மைகளை குறிக்கும். சில கொள்கைவிதிகளை வகுக்கக் கூடிய அளவு, அடிப்படையான மெய்மைகளைத் தேடிக் காண்பதே ஆய்வாகும்.

ஆய்வு என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படுகின்ற றிசேர்ச் (Research) என்ற சொல் பிரஞ்சு மொழிச் சொல்லான ரிசெர்ச்சர் (Recearcher) என்ற சொல்லில் இருந்து வந்ததாகும்.

ஒன்றைப் பற்றி மிக அணுக்கமாகவும், நுணுக்கமாகவும் தேடும் திறனை இது குறிக்கிறது. உண்மையைக் கண்டறிய உந்துகின்ற நாட்டமே ஆய்வாக மலர்கிறது. அறிவின் அடிப்படையில் சான்றாதாரங்களைக் கொண்டு உண்மை காணச் செய்யப்படும் எவ்வித முயற்சியும் ஆராய்ச்சி என அழைக்கப்படுகின்றது.

ஆய்வுக் கட்டுரையின் கருத்துக்கள் உணர்ச்சிக்கு இடம் கொடுக்காமல் அறிவுக்கு முதன்மைகொடுத்து எழுதப்பட வேண்டும் தமிழ்ப் பற்று, இன உணர்வு போன்ற காரணங்களினால் நமது இலக்கியம் சார்ந்த சில உண்மைகளை நாம் சொல்லத் தயங்கலாம்.

இது ஆரோக்கியமான நிலைப்பாடு அல்ல. உள்ளத்தில் உணர்ந்த உண்மைகளை மறைக்காமல், அஞ்சாமல் துணிவுடன் முன்வைக்க வேண்டும்.

அப்போதுதான் நமது தமிழ் இலக்கியம் ஆரோக்கியமான வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கும். வெறுமனே நமது எண்ணங்களையும், உணர்வுகளையும் அல்ல, மாறாக நமது ஆய்வின் முடிவுகளை, உள்ளூர உணர்ந்த உண்மைகளை ஒளிவு மறைவின்றி நாம் சொல்ல வேண்டும். நாம் வெளிப்படுத்தும் முடிவுகளை, உண்மைகளை கொள்ளுவதும் தள்ளுவதும் தமிழ் உலகத்தைப் பொறுத்தது எனத் தெரிவித்தார்.



காரைநகர் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்திற்காக சேகரிக்கப்பட்ட கொடி தின நிதியிலிருந்து வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், மிதிவண்டிகள், பாதணிகள் என்பன வழங்கப்பட்டதுடன் தேசிய ரீதியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டதைக் காணலாம்.

# பெண்களுக்கு எதிரான வன்முறை முல்லையில் விழிப்புணர்வு



(முல்லைத்தீவு)

பெண்களுக்கு எதிரான வன்முறை வாரம் முல்லைத்தீவில் கடந்த திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

மனித உரிமைகள் இல்லத்தின் சார்பில் அனுஷ்டிக்கப்பட்ட இந்நிகழ்வில் பெருமளவிலானோர் கலந்துகொண்டு பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கு பாடுபடுவோம் உள்ளிட்ட கோஷங்களை எழுப்பினர்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எவ்வாறு இடம்பெறுகின்றது, கிராமப்புறங்களில் எவ்வாறான பாதிப்புகளுக்கு பெண்கள் முகம்கொடுக்கின்றனர், பெண்கள் எதிர்நோக்கும் இதர வன்முறைச் சம்பவங்கள் ஆகியவற்றை இனம் காணும் வகையிலான செயலமர்வும் நடைபெற்றது.

இதேவேளை, இந்நிகழ்வில் பங்குகொண்ட பெண்கள் கைகளில் வெள்ளைநிறப் பட்டி அணிந்து பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம் என உறுதிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

# தேசிய சுகாதார வாரத்தில் விழிப்புணர்வு பேரணி



(மன்னார்)

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஏற்பாடு செய்திருந்த மாபெரும் விழிப்புணர்வு பேரணி நேற்று முன்தினம் காலை மன்னாரில் இடம்பெற்றது.

மன்னார் - தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன் காலை 6.45 மணிக்கு குறித்த பேரணி ஆரம்பமானது

குறித்த பேரணியானது பிரதான வீதியூடாகச் சென்று மன்னார் பஸார் பகுதியை சென்றடைந்தது.

பின் மீண்டும் வைத்திய சாலை வீதியூடாகச் சென்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினை சென்றடைந்தது.

இதன் போது பலர் கலந்து கொண்டதோடு விழிப்புணர்வு பதாதைகளையும் ஏந்தியவாறு பேரணியில் சென்றனர்.

# மீள்குடியேற்ற கிராமத்திற்கு குழாய் குடிநீர் விநியோகம்



(கொழும்பு)

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட கடும் வரட்சியினால் முசலி பிரதேசமும் அதிகம் பாதிக்கப்பட்டது. அதிலும் வெளிமலை மீள்குடியேற்ற கிராம மக்கள் அதிகமான பாதிப்புக்களை எதிர் நோக்கினர்.

இங்குகுடிநீர் பிரச்சினையினை நிவர்த்தி செய்து தருமாறு வன்னி மாவட்ட கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் றிஷாத் பதியுதீனின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதன் பயனாக IIRO என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் உதவியோடு ரூபா. 800,000 பெறுமதியான குழாய் குடிநீர் விநியோகம் வழங்கப் பட்டது.

இவ் குடிநீர் விநியோகத்திட்டத்தினை கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் றிஷாத் பதியுதீனின் பணிப்புரையின் பேரில் அமைச்சரின் இணைப்புச்செயலாளர் அலிகான் ஷரிப் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.





ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மன்னார் மாவட்ட தலைமைக்காரியாலயம் ஏற்பாடு செய்திருந்த கிறிஸ்மஸ் கறோல் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்தில் இடம்பெற்றது.

இதன் போது அரச உடமைகள் மற்றும் வர்த்தக முயற்சி அமைச்சர் தயா சிறித்த திசேரா, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் கீதாஞ்சலி உட்பட பலர் கலந்து கொண்டு குறித்த கறோல் நிகழ்வினை பார்வையிட்டனர்.

01. தரம் 4 கணிதப் புத்தகத்தை விரிக்கும்போது இடது கைப்பக்கம் 104 ஆக இருந்தது. அடுத்த பக்கத்தை விரிக்கும்போது வலது கைப்பக்கம் இருக்கும் பக்க எண் எது?
1) 105 2) 106 3) 107 4) 110


02. லதா லீலாவின் சகோதரி, லீலா ஜெயந்தியின் மகள். பாபு லீலாவின் தந்தை. லதா பாபுவிற்கு என்ன உறவு முறை?
1) மகள் 2) மருமகள் 3) சகோதரி 4) மகன்

03 ஒரு பாதையில் 10 மின்கம்பங்கள் இருந்தன. அடுத்துவரும் இரு மின்கம்பங்களுக்கு இடையிலான தூரம் 15m எனில், முதல் மின் கம்பத்திற்கும், இறுதிக் கம்பத்திற்கும் இடையிலான மொத்தத் தூரம் எவ்வளவு?
1) 150 m 2) 135 m 3) 125 m 4) 165 m


**பின்வருவனவற்றின் விடையை எழுதுக.**

01. 15 லீற்றர் 400 மில்லி லீற்றர் கொண்ட பாலை சமனான இரண்டு பாத்திரத்தில் ஊற்றினால் ஒரு பாத்திரத்தில் உள்ள அளவு. ......................L ......................ml

02. 8 மீற்றர் துண்டுகள் 8 வெட்டிய பின்னர் 225 மீற்றர் துணியில் மிகுதி எவ்வளவு?
..............................

03.

சரியான நேரத்தைவிட 45 நிமிடம் குறைவாக இக்கடிகாரம் காட்டுகிறதெனில், உண்மையான நேரத்தை எழுதுக.
..............................

04. பாடசாலை ஒன்று 16.20 மணிக்குத்தான் விடும் எனில் இந்நேரத்தைச் சாதாரண நேரத்தில் எழுதிக் காட்டவும்.
..............................

05.



1. இச்சதுரக் கூடு ஒன்றின் பரப்பளவு ஒரு சதுர சென்ரி மீற்றர் எனில், இங்கு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு யாது?
..............................

2. இச்சதுரக் கூட்டின் சுற்றளவு யாது?
..............................

**பாடசாலை விடுமுறை ஆரம்பமாகிவிட்டது. நான் நண்பர்களுடன் மிகவும் மகிழ்ச்சியோடு மைதானத்திற்குச் சென்று விளையாடினேன். திடீரென எனது சட்டையின் பின்பக்கம் கிழிந்துவிட்டது.....என்பதைத் தொடர்ந்து 5 வசனங்கள் எழுதுக.**

01. ..............................
02. ..............................
03 ..............................
04. ..............................
05. ..............................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

வெளியீடு 19



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**பின்வரும் பந்தியை வாசித்து விடை எழுதுக.**

ஒரு நாள் நரி ஒன்று உணவு தேடிக் காட்டில் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருக்கும்போது கால் தவறி பாழும் கிணறொன்றில் விழுந்துவிட்டது. எவ்வளவு முயன்றும் அதனால் கிணற்றில் இருந்து வெளியேற முடியவில்லை. எனவே சற்று நேரம் அக்கிணற்றினுள் அமைதியாக இருந்தது. சிறிது நேரத்தில் அவ்வழியாகச் சென்ற முயல், நரி ஒன்று கிணற்றினுள் இருப்பதைக் கண்டு, இது ஏதோ தந்திரத்தில் ஒழிந்து கொண்டிருப்பதாக நினைத்து வேகமாக அங்கிருந்து சென்றுவிட்டது. இன்னும் சிறிது நேரத்தில் அந்தப் பக்கமாக வந்த ஆடொன்று நரியைக் கண்டு, ஏனப்பா இதற்குள் அமர்ந்திருக்கிறாய்? என அன்பாகக் கேட்டது. அதற்கு அந்த நரி, இக்கிணற்று நீர் மிகச் சுவையாகவுள்ளது. குடிக்கக் குடிக்கச் சுவையாக உள்ளது என்றது. ஆடும் எதையும் சிந்திக்காமல் அக்கிணற்றினுள் குதித்தது.

01. இப்பந்தியின்படி வேண்டுமென்றே துன்பத்தில் விழுந்தது யார்?
..............................

02. என்ன செய்து கொண்டிருக்கும்போது நரி கிணற்றினுள் விழுந்தது?
..............................

03. இங்கு குறிக்கப்பட்டுள்ள விலங்குகளில் தந்திரமுள்ள விலங்கு எது?
..............................

04. முயல் எவற்றை உணவாகக் கொள்ளும்?
..............................

05. ஆடு ஏன் கிணற்றினுள் குதித்தது?
..............................

06. பின்வரும் சொற்களை எதிர் காலத்தில் எழுதுக.
1. விட்டது :..............................
2. கண்டு :..............................

07. ஆடுகள் கிணற்றில் குதித்தன என்பதை ஒருமையாக மாற்றி எழுதுக.
..............................

08. நரி உணவு தேடியது என்பதைப் பன்மையாக மாற்றி எழுதுக.
..............................

09. பின்வருவனவற்றுக்கு ஒத்த கருத்துள்ள சொற்கள் எழுதுக.
1. மறைத்து :..............................
2. சிறிது :..............................

10) அதிகளவு நீர் தேவையான தாவரம் எது?
1. நெல் 2. பனை 3. நிலக்கடலை

11) தரப்பட்ட தாவரங்களில் ஆணிவேர் அற்ற தாவரம் எது?
1) புளி 2) மா 3) தென்னை

12) நீரில் மிதக்கக் கூடிய ஓர்பொருள் பின்வருவனவற்றுள் எது?
1) றெஜிபோம் 2) பனிக்கட்டி 3) மேற்சொன்ன இரண்டும்

**பின்வரும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள சொற்களை அமைக்க.**

1. o, k, o, s, b, ..............................
2. m, a, t, s, p, ..............................
3. a, g, n, m, o, ..............................
4. று, மு, க, ஆ, ம், ..............................
5. லை, தி, கோ, ம, ண, ரு, ..............................
6. ணா ச, ல, ர, ம். ய, ..............................
7. ச், வீ, வெ, ச, டு, ளி, ..............................
8. ரோ, ரி, ப, ப, கா ..............................


**பின்வரும் ஒவ்வொன்றுக்கும் தனியொரு சொல் எழுதுக.**

1. ஒருவர் பிறந்த நாடு :.............................. 2. பெண் குரங்கு:..............................
3. நீரிலும் நிலத்திலும் வாழ்தல்:.............................. 4. தலையில்லாத உடல்:..............................
5. யானையின் மலம்:..............................

**பின்வருவனவற்றின் கருத்தை எழுதுக.**

1. தான் தோன்றி :..............................
2. வயிற்றிலடித்தல் :..............................
3. பித்தலாட்டம் :..............................
4. கருதுகோள் :..............................

**மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**


1. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள தலைக்குரியது.
1. ஒரு ஆடு 2. ஒரு மாடு 3. ஒரு முயல்


2. .............................. மூக்குப் போன்றது என்பர். இங்கு இடைவெளியில் வரவேண்டியது.
1. கொக்கின் 2. சிட்டுக்குருவியின் 3. கிளியின்

3. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள பாதத்துக்குரியது.
1. ஒரு யானை 2. ஒரு மாடு 3. ஒரு ஒட்டகம்


4. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள தலைக்குரியது.
1. ஒரு கொக்கு 2. ஒரு காகம் 3. ஒரு பருந்து




5. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள கோள்.
1. புதன் 2. சனி 3. வெள்ளி

6. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள சந்திரனைக் காணும் இரவு.
1. பௌர்ணமி 2. அமாவாசை 3. அமாவாசைக்குப் பின்

7. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள தாவரம்.
1. கரும்பு 2. மூங்கில் 3. நெல்

8. 
இப்பூவில் எத்தனை இதழ்கள் உள்ளன?
1. ஐந்து 2. இரண்டு 3. ஒன்று

9. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள இலையானது,
1. வெண்டிக்காய் மரத்தினது 2. மரவள்ளி மரத்தினது 3. கத்தரி மரத்தினது

10. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள கிணறு.
1. ஆழக்கிணறு 2. துலாக்கிணறு 3. பாழுங்கிணறு

11. இவ்வாறான கிணறுகள் காணப்படும் பிரதேசம்.
1. கரையோரம் 2. மத்திய மலைநாடு 3. ஆற்றோரம்

12. மேலேயுள்ள கிணற்றின் செயற்பாட்டைப் பின்வரும் எதனுடன் ஒப்பிடலாம்?
1. சில்லு 2. இயந்திரம் 3. நெம்புகோல்

13. 
இப்படத்தின்படி இப்பிள்ளையின் நிலை?
1. நிமிர்ந்த 2. சீரான 3. கவனமான

14. பின்வருவனவற்றுள் கவட்டு நிகழ்ச்சி எது?
1. நாட்டுக்குக் குறுக்காக ஓடுதல் 2. உயரம் பாய்தல் 3. 100 மீற்றர் ஓட்டம்

15. நாயின் வாலை இலகுவில்
1. நிமிர்த்த முடியாது 2. நிமிர்த்தவே முடியாது 3. நிமிர்த்தலாம்

**கீழே தரப்பட்ட தகவல்களை வாசித்து நன்கு விளங்கிச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

**வெப்பத்தில் சில பொருட்கள் விரிவடைகின்றன.**


இதனை நாளாந்த வாழ்வில் நாம் அவதானிக்கக் கூடிய சந்தர்ப்பம்.
1) கோடை காலத்தில் மின்கம்பி, தந்திக்கம்பி என்பன மிகவும் தளர்வாகக் காணப்படுதல்.
2) குளிரான மாரிகாலத்தில் மின்கம்பி, தந்திக் கம்பி என்பன மிகவும் தளர்வாகக் காணப்படுதல்.
3) வண்டில் சில்லுக்கு வளையம் இடும்போது மரச்சில்லானது சூடுகாட்டப்படுகின்றது.

**ஒளியானது ஒலியிலும் மிக விரைவாகச் செல்லும்**

1) மின்னல் தெரிந்த பின்னரே இடிமுழங்க ஓசை கேட்டல், ஆனால் இவையிரண்டும் ஒரே நேரத்திலேயே நடைபெறுகின்றன.
2) ஓட்டப்போட்டியின் போது வெடிசுட்ட புகை தெரிந்த பின்னரே சத்தம் கேட்கிறது.
3) மேற்கூறிய (1) உம் (2) உம் சரியானவை.

# ஐ.நாவின் தீர்மானம் உதாசீனம்; கொரியாவில் அமைதி குலையும்

## இந்தியா எச்சரிக்கை



(புதுடில்லி)

ஐ.நா சபை, வடகொரியாவுக்கு ஏவுகணை சோதனைகளில் ஈடுபட தடை விதித்துள்ள நிலையில் வட கொரியா வாங்மியாங்சாங்-3 'Kwangmyong song-3' என்ற ரொக்கெட்டை ஏவியதாக செய்தி வெளியாகியது.

பியாங்கன் மாகாணத்தில் உள்ள ஷோகே விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் இருந்து வாங்மியாங்சாங்-3 'Kwangmyong song-3' என்ற ரொக்கெட்டை ஏவியதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பில் ஐ.நா. சபையின் தீர்மானத்தை மீறும் வகையில், வடகொரியாவின் இந்தச் செயல் அமைந்திருப்பதாகவும், இது போன்ற செயல்களை வட கொரியா தவிர்க்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஏவுகணை சோதனை தேவையற்ற செயல் என்றும் இதனால் கொரிய தீபகற்பத்தில் அமைதி குலையும் என இந்தியா எச்சரித்துள்ளது.

இது தவிர, ஜப்பான் மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளும் இந்த ஏவுகணை சோதனையை ஏற்க முடியாது எனத் தெரிவித்துள்ளன.

# ஆஞ்சநேயர் படம் பதித்த சேலையை குஷ்பு கட்டியதால் புதிய சர்ச்சை





(சென்னை)

இந்து மதக் கடவுள்களான ராமர், கிருஷ்ணர் மற்றும் ஆஞ்சநேயரின் படம் பதித்த சேலையைக் கட்டியதற்காக நடிகை குஷ்பு மன்னிப்பு கேட்க வேண்டும் என்று இந்து மக்கள் கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்து மக்கள் கட்சியின் சென்னை மண்டல தலைவர் முத்து ரமேஷ், தெரிவிக்கையில், நடிகை குஷ்பு கடவுள்களை தொடர்ந்து அவமதித்து வருகிறார்.

ஹைதராபாத்தில் நடந்த தெலுங்குப்பட விழா ஒன்றில் இந்துக் கடவுள் படங்கள் அச்சிடட சேலை அணிந்து பங்கேற்று உளளார். அவரது சேலை போடரில் பிரம்மச்சாரியான ஆஞ்சநேயர், யோகங்களின் தலைவர் கிருஷ்ணர், ஒருவனுக்கு ஒருத்தி என்ற தத்துவத்தை போதித்த ராமர் போன்ற இந்துக் கடவுள் படங்கள் உள்ளன.

அதை மார்பில் போர்த்திக் கொண்டு விழாவில் பங்கேற்று உள்ளார்.

இது இந்துக் கடவுள்களை அவமதிப்பது ஆகும். இந்த குற்றத்தை அவர் தெரியாமல் செய்திருந்தால் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும்.

தெரிந்தே செய்திருந்தால் குஷ்புவிற்கு எதிராக போராட்டம் நடத்துவோம் என்று அதில் தெரிவித்துள்ளார். முன்னதாக குஷ்பு, உருத் ராடச மாலையில் பெரிய பிளாஸ்டிக் தாலியைக் கோர்த்து அணிந்து வந்து சர்ச்சையைக் கிளப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிளாஸ்ரிக் நாணயத்தாள் விரைவில் அறிமுகமாகிறது



(புதுடில்லி)

நாட்டில் சோதனை முறையில் விரைவில் பிளாஸ்ரிக் நாணயத் தாள்களை அறிமுகப் படுத்த இருப்பதாக மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இராஜ்யசபாவில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த ப.சிதம்பரம் - உலகம் முழுவதும் 20 நாடுகளில் பிளாஸ்ரிக் நாணயத் தாள்கள் புழக்கத்தில் இருக்கின்றன. எமது நாட்டில் சோதனை ஓட்டமாக பிளாஸ்டிக்காக நாணயத் தாள்கள் அறிமுகப்படுத்த படவுள்ளது.

10 ரூபாத்தாள் முதல் கட்டமாக பிளாஸ்ட்ரிகாக வெளியிடப்படுகிறது. ரூபா 1,000 கோடி மதிப்பிலான 100 கோடி ரூபா 10 பிளாஸ்ரிக் தாள்கள் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது என்றார் அவர்.


# ஊர்காவற்றுறை பிரதேசசபை மீள் கேள்வி அறிவித்தல் - 2013

**ஊர்காவற்றுறை பிரதேச சபையின் எல்லைக்குள் இருக்கும் மீன்சந்தை, மரக்கறிச்சந்தை, மாட்டு இறைச்சிக்கடைகள், சந்தை உட்புறக்கடைகள் என்பன 01.01.2013 தொடக்கம் 31.12.2013 வரை குத்தகைக்கு வழங்குவதற்கு மீள் கேள்வி கோரப்படுகின்றது.**

| இல | குத்தகை விபரம் | மாதாந்த வாடகை (VAT, NBT தவிர) | கேள்விப்பத்திரப் பணம் (VAT, NBT தவிர மீளளிக்கப்படாதது). | கேள்விப்பத்திரப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது). | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT, NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| 01. | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக் கடை | 600.00 | 500.00 | 5,000.00 | 313,500.00 |
| 02. | ஊர்காவற்றுறை சந்தை உட்புறக்கடை (இல.01,02) | 400.00 | 500.00 | 5,000.00 | 104,500.00 |
| 03. | நாரந்தனை மீன் சந்தை | | 500.00 | 1,000.00 | 18,050.00 |
| 04. | நாரந்தனை மாட்டிறைச்சிக் கடை | 600.00 | 500.00 | 5,000.00 | 209,000.00 |
| 05. | புளியங்கூடல் மீன் சந்தை | | 500.00 | 1,000.00 | 10,925.00 |
| 06. | புளியங்கூடல் மரக்கறிச்சந்தை | | 500.00 | 1,000.00 | 10,925.00 |

- கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் 12.12.2012 தொடக்கம் 19-12-2012 வரை.
- கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித்திகதி 19.12.2012 நண்பகல் 12 மணி வரை.
- கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி 19.12.2012 பிற்பகல் 2.00 மணி
- கேள்வி சம்பந்தமான மேலதிக நிபந்தனை விபரங்களை 17.11.2012 ஆம் திகதி ய தினக்குரல், தினமுரசு பத்திரிகையிலும் எமது தலைமை அலுவலகத்திலும் நேரடியாகவோ அல்லது 021 321 2398 இலக்க தொலைபேசி மூலமோ அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஊர்காவற்றுறை பிரதேச சபை
சுருவில் வீதி, ஊர்காவற்றுறை
12.12.2012

(C/2221)

ம.ஜெயகாந்தன்
தவிசாளர்
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

# BID NOTICE

# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna will receive sealed bids from the qualified contactors for the following works.

| Work / Service Details | Non - refundable Deposit (Rs.) ( Bid fee) | Security Deposit (Rs.) | Approximate Direct cost of the work (Rs.In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| NTS Lecture Hall 2nd floor balance work | 500.00 | 10,000.00 | 0.9 | C9 |
| Construction of NTS student changing room | 500.00 | 12, 000.00 | 1.1 | C9 |

Bid forms may be obtain from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Office, Teaching Hospital, Jaffna till 20/12/2012.

Perfected bid should be sealed and mark with the and the name of the work on the top left corner of the envelop and send by registered post to reach the Director, Teaching Hospital, Jaffna or could be deposited in the bid box kept at Director Office, Teaching Hospital, Jaffna.

Bids will be accept till 10.00 am on 21/12/2012 and open immediately thereafter. Bidders of their authorized representatives could be present at the time of opening of bids.

Bids forms may be inspected by the bidders free of charge at the residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**13/12/2012.**

(C/2222)

# “ஸ்கட்” ஏவுகணைகள் மூலம் மக்களை அழிக்கும் சிரியா

## அமெரிக்கா குற்றச்சாட்டு



(வோஷிங்டன்)

சிரியாவில் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்திவரும் புரட்சிப் படையினர் மீது தாக்குதல் நடத்துவதாகத் தெரிவித்து, தனது சொந்த மக்களையே ஏவுகணைத் தாக்குதல் மூலம் அந்நாட்டு அரசு கொன்றொழித்து வருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் - ஆசாத்தின் 40 ஆண்டு கால குடும்ப ஆட்சியை எதிர்த்து கடந்த 2 வருடங்களாக பொது மக்கள் போராடி வருகின்றனர். இதையொட்டி இராணுவம் நடத்திய தாக்குதலில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். சுமார 5 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் சிரியாவை விட்டு வெளியேறி அயல் நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

சிரியாவில் தாக்குதலை நிறுத்தும்படியும், ஜனாதிபதி ஆசாத் பதவி விலகி அமைதியைஏற்படுத்தும்படியும் ஐ.நா. வலியுறுத்தி வருகிறது. அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளும் கோரிக்கை விடுத்துள்ளன. ஆனால், ஜனாதிபதி ஆசாத் செவி கொடுத்து கேட்கவில்லை. போராட்டக்காரர்கள் மீதும் அவர்களுக்கு ஆதரவாகப் போரிடும் புரட்சிப் படை மீதும் குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால் தினமும் பொதுமக்கள் தொடர்ந்து செத்துமடிகின்றனர்.

இந்த நிலையில், ஆசாத்தின் இராணுவம், போராட்டக்காரர்கள் மீது ‘ஸ்கட்’ ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருவதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. வடக்கு சிரியாவில் தலைநகர் டமாஸ்கல் மற்றும் அதைச்சுற்றியுள்ள 6 இடங்களிலும் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் எத்தனை பேர் பலியாகினர் என இதுவரை சரிவரத் தெரியவில்லை என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

‘ஸ்கட்’ ஏவுகணை ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டது. ஏற்கனவே அவற்றை சிரியா வாங்கி குவித்து வைத்திருந்தது. அவற்றை தனது பாதுகாப்புக்கு பயன்படுத்துவதை விடுத்து தனது நாட்டு மக்கள் மீதே பிரயோகிக்கிறது. இது கண்டனத்துக்குரியது என்றும் அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

# பரிசுத்த பாப்பரசர் டுவிட்டரில் ஆசீர்வாதம்



(வத்திக்கான்)

போப்பாண்டவர் 16ஆம் பெனடிக்டும் டுவிட்டருக்குள் நுழைந்துள்ளார். தனது முதல் டுவீட் செய்தியில், அனைவரையும் ஆசீர்வதிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். pope benedict blesses in his first tweet டுவிட்டருக்குள் நுழையாதவர்களே யாரும் இல்லை என்றாகி விட்டது.

இந்த நிலையில் தற்போது போப்பாண்டவரும் டுவிட்டருக்குள் வந்து விட்டார். தனது முதல் டுவீட்டில் அவர் கூறியிருப்பதாவது; அன்பு நண்பர்களே, டுவிட்டர் மூலமாக உங்களைத் தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். உங்களது பதில்களுக்கு எனது நன்றிகள். அனைவரையும் எனது இதயத்தின் அடி ஆழத்திலிருந்து ஆசீர்வதிக்கிறேன் என்று கூறியுள்ளார் போப்பாண்டவர். 85 வயதாகும் 16ஆம் பெனடிக்ட் தான் டுவிட்டருக்குள் நுழைந்த முதல் போப்பாண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.



மியான்மர் எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சாங் சூகி தமது சொநதத் தொகுதியான கவ்மு நகரிலுள்ள பாடசாலைக்குச் சென்று மாணவர்களை சந்தித்து உரையாடுவதைக் காணலாம்

# காந்தி எழுதிய கடிதம் 43 இலட்சத்திற்கு ஏலம்

வங்காள மொழி கவிஞர் ரவீந்திர நாத் தாகூரின் அண்ணன் துவிஜேந்திர நாத்திற்கு சிறையில் இருந்த படியே மகாத்மா காந்தி எழுதிய கடிதம், நிர்ணயிக்கப்பட்டதை விட ஏழு மடங்கு அதிகமான விலைக்கு ஏலம் போனது.


சபர்மதி சிறையில் 1922 ஆம் ஆண்டு சிறை வைக்கப்பட்டிருந்த போது, இந்தியாவின் தேசிய கீதத்தை இயற்றிய வங்காள மொழி கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் அண்ணன் துவிஜேந்திர நாத்திற்கு தன் கைப்பட பென்சிலால் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். இந்த இருபக்க கடிதத்தை ஏலம்விட்ட, லண்டனில் உள்ள சோத்பை ஏல நிறுவனம் இக்கடிதம் சுமார் 5 ஆயிரம் பவுண்டிலிருந்து 7 ஆயிரம் பவுண்ட் வரை ஏலம் போகும் என மதிப்பிட்டிருந்தது. இக்கடிதம் 49 ஆயிரத்து 250 பவுண்டுக்கு (ரூ.43 இலட்சம்) ஏலம் போனது.

உலகச் செய்திகள்

இதே போல்,1922ஆம் ஆண்டு, தனது நண்பரின் தாயார் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து காந்தி எழுதிய மற்றொரு கடிதமும் எதிர்பார்க்கப்பட்ட 4 ஆயிரம் பவுண்டுக்கும் அதிகமாக, 5 ஆயிரத்து 625 பவுண்டுக்கு ஏலம் போனது குறிபிடத்தக்கது.

# அணு ஆயுத எண்ணிக்கையை அதிகரிக்கிறது பாகிஸ்தான்

## அமெரிக்க ஆய்வாளர் தகவல்



பாகிஸ்தானில் அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்து வருவதாக அமெரிக்காவைச் சேர்ந்த படைத்துறை ஆய்வாளர் தெரிவித்துள்ளார். ஸ்டிம்சன் இன்ஸ்டிட்டியூட்டைச் சேர்ந்த ஆய்வாளர் மைகல் கிரிப்பான் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க பாகிஸ்தான் நடவடிக்கை எடுத்துள்ளது. அங்கு அணுஆயுதத் திட்டங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அணு ஆயுதத்தை அரசியல் மற்றும் இராணுவ ரீதியாகப் பயன்படுத்தக்கூடிய வலிமையான கருவியாக அந்நாட்டு இராணுவ அதிகாரிகள் கருதுவதே இதற்கு காரணம்

இதையடுத்து, பாகிஸ்தான் இருப்பு வைத்துள்ள அணு ஆயுதங்களுக்கு ஏற்ப, இந்தியாவும் அவ்வகை ஆயுதங்களை தயாரிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

எனினும், அணு ஆயுதங்களை வைத்து போரில் ஈடுபடும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை. அதை ஒரு அரசியல் ரீதியான வலிமை சேர்க்கும் கருவியாக மட்டுமே இந்தியா பார்க்கிறது. அதோடு, இந்தியாவில் அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பான தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம், அரசியல் வாதிகளின் கையில் தான் இருக்கிறது.

அணு ஆயுதங்களை அதிகரிக்க நினைக்கும் பாகிஸ்தான், தொடர்ந்து சர்வதேச நாடுகளின் கண்டனத்தை எதிர்கொண்டு தனிமைப்படுத்தப்பட வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நான்காவது முறையாகவும் சாவேஸிற்கு சத்திர சிகிச்சை



குடல் புற்றுநோயால் அவதிப்பட்ட வெனிசுலா ஜனாதிபதி ஹுகோ சாவேஸிற்கு வெற்றிகரமாக அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாக அந்நாட் டின் துணை ஜனாதிபதி நிக்கோலஸ மடுரோ தெரிவித்துள்ளார்.

நான்கு முறை வெனிசுலா ஜனாதிபதியாக இருந்த சாவேஸிறகு, குடல் புற்றுநோய் இருப்பது கடந்த 2011ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது.

இதையடுத்து அதே ஆண்டில் ஜுன் மாதம் 10ஆம் திகதி கியூபாவில் அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. ஆனால அதன் பிறகும் அவருக்கு மீண்டும் புற்றுநோய் தாக்கம் ஏற்பட்டதால் நேற்று முன்தினம் மீண்டும் கியூபாவில் அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

சுமார் 6 மணிநேரம் நடந்த அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தததாகவும், சாவேஸ் தற்போது நலமாக உள்ளார் என்றும் வெனிசுலா துணை ஜனாதிபதி நிக்கோலஸ் மடுரோ தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், சாவேஸிற்காக பிரார்த்தனை செய்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று குறிபபிட்டுள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் இருந்து இதுவரை சாவேஸுற்குப் புற்றுநோய் காரணமாக நான்கு முறை அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்ரேலிய தேர்தலில் போட்டியிடவுள்ள அசாஞ்சே



அடுத்த வருடம் நடைபெறவுள்ள அவுஸ்ரேலிய தேர்தலில் போட்டியிடப்போவதாக “விக்கிலீக்ஸ்” நிறுவுநர் அசாஞ்சே தெரிவித்துள்ளார். பல்வேறு நாட்டு அரசுகளின் இணையத்தளத்தில் உள்ள இரகசிய செய்திகளை வெளியுலகிற்கு அம்பலப்படுத்தி பரபரப்பை ஏற்படுத்தியவர் “விக்கிலீக்ஸ்” இணையத்தளத்தின் உரிமையாளர் ஜுலியன் அசாஞ்சே. அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த இவர்மீது சுவீடன் நாட்டில் பாலியல் குற்றம் தொடர்புடைய வழக்கு நடந்து வருவதால், ஈக்வடோர் நாட்டில் தஞ்சமடைந்து வசித்து வருகின்றார்.

இந்நிலையில், 2013ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவில் நடைபெறும் தேர்தலில் செனட் உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட உள்ளதாக ஜுலியன் அசாஞ்சே அறிவித்துள்ளார். விக்கிலீக்ஸ் என்ற பெயரில் அவுஸ்ரேலியாவில் அரசியல் கட்சியைத் தொடங்கி இநதத் தேர்தலில் போட்டியிட அவர் திட்டமிட்டுள்ளார்.

அவுஸ்ரேலிய நாட்டு சட்டப்படி அயல் நாட்டில் வசிக்கும் வேட்பாளராக போட்டியிடப் போவதாக அவர் கூறியுள்ளார். தனது விக்கிலீக்ஸ் இணையத்தளத்தை விரும்பும் 1.7 மில்லியன் உறுப்பினர்களும், 2.1 மில்லியன் பேஸ்புக் ஆதரவாளர்களும், அவுஸ்ரேலியாவில் தனக்கு ஆதரவாக, இணையத்தளத்தின் வாயிலாக தேர்தல் பிரசாரம் செய்ய முன்வருவார்கள் என அசாஞ்சே நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாத தடைச்சட்டம் அகற்றப்பட வேண்டும்

## மனித உரிமைகள்தின நிகழ்வில் பேச்சு




(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதன் பயனை பரிபூரணமாக அனுபவிக்க வேண்டுமாயின் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று யாழ். பல்கலைக் கழக சட்டத்துறை விரிவுரையாளர் கே.குருபரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை 9.00 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்ற 64 ஆவது சரவதேச மனித உரிமைகள் தின நிகழ்வில் கலந்துகொண்டு சிவில மற்றும் அரசியல் உரிமைகள் என்னும் தலைப்பில் கைதுகளும் தடுத்து வைத்தல், சித்திரவதை எனும் விடயம் தொடர்பில் உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலய இணைப்பாளர் ரி.கனகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் அவசரகாலச் சட்டம் கடந்த ஆகஸ்ட் 30 ஆம் திகதி 2011 அன்று முதல் நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டாலும் அந்தச் சட்டத்தின் கீழ் உள்ள சில சரத்துக்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவசரகாலச் சட்டத்திற்குக் கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அது நீக்கப்பட்டதன் பின்னரும் மாற்றமின்றித் தொடர்ந்துகொண்டிருப்பது அவசரகாலச் சட்டத்தில் இந்த சரத்துக்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தில் சேர்க்கப்படுகின்றது என்பதனை விளங்கிக் கொள்ளவேண்டும். அதாவது அவசரகாலச் சட்டம் நீக்கப்படுவதற்கு முதல்நாள் இரண்டு விஷேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலமாக இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. என்று தெரிவித்த குருபரன் அவசரகாலச்சட்டத்தின் பிரகாரம் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தின் பிரகாரமே நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் அந்தச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவசரகாலச் சட்டத்தின் சில சரத்துக்களை சேர்த்ததின் பிரகாரம் நாடாளுமன்ற அங்கீகாரமின்றித் தேவைப்படும் பட்சத்தில் எவரை வேண்டுமானாலும் நடவடிக்கைக்குட்படுத்த முடியும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சம்பவங்களை அடுத்து மாணவர்களைச் சரணடையுமாறு பணிக்கப்பட்டது சட்டநுணுக்கத்தின் பிரகாரமே என்றும் அவர் தெரிவித்தார்.

"எனது குரலுக்கும் பெறுமதியுண்டு'' எனும் தொனிப் பொருளிலான இந்த நிகழ்விற்கு யாழ். மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி இ.த.விக்கினராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக பட்டதாரிப் பயிலுனர்களால் நடாத்தப்பட்ட நாடக நிகழ்வு நடைபெற்றதைத் தொடர்ந்து சமூக, கலாசார மற்றும் பொருளாதார உரிமைகள் தொடர்பில் யாழ். பல்கலைக் கழக பேராசிரியர் சிவனேசனும், பெண்கள் உரிமைகள் தொடர்பில் வைத்தியக் கலாநிதி திருமகளும் கருத்து வெளியிடும் சுதந்திரம் மொழி உரிமைகள் தொடர்பில் யாழ். பல்கலைக்கழக சட்டவிரிவுரையாளர் திருமதி கோசலை மதன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். தொடர்ந்து குழுக் கலந்துரையாடலைத் தொடர்ந்து நிகழ்வு நிறைவடைந்தது.

இந்நிகழ்வில் சிவில் சமூகப் பிரதிநிதிகள், பொலிஸ் அதிகாரிகள், பொதுமக்கள், பத்திரிகையாளர்கள் எனப் பாலர் கலந்து கொண்டனர். (பா,இ)

# முன்னாள் போராளிகளுக்கு விசேட பரீட்சை நிலையம்

புனர்வாழ்வளிக்கப்படும் முன்னாள் போராளிகள் 46 பேர் இம்முறை க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். வவுனியா மத்திய கல்லூரியில் விசேட பரீட்சை மண்டபமொன்று இப்போராளிகளுக்காக அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் ஆரம்பமாகிய கா.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு 542, 260 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

## ஆசியாவின்...

இடம்பெறும் இந்த சம்பாஷனையில் 29 நாடுகளைச் சேர்ந்த கூற்படை மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## அமெரிக்க...

நிலைமைகள், பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவை குறித்து ஜாலிய விக்ரமசூரிய, இதன்போது காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு விளக்கியுள்ளார்.

போருக்குப் பின்னர், இலங்கையின் பொருளாதாரம் உண்மையிலேயே வளர்ச்சியடைந் துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள தூதுவர், கடந்த வருட இறுதியில் இலங்கையின் பொருளா தார வளர்ச்சி 8.3 வீதமாக இருந்து எனவும் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை போர் நடைபெற்ற பிரதேசங்களில் பொருளாதார வளர்ச்சி வீதமானது 22 வீதமான இருந்து எனவும் அவர் கூறியுள்ளார். அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்பு களை வலுப்படுத்துவது இரண்டு நாடுகளுக்கும் பிரயோசனமாக அமையும் எனவும் இலங்கை தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பல்கலை...


சங்கத் தலைவி என்றும் ஏனைய இருவரும் மன்னார் மற்றும் வவுனியா பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும், இவர்களில் இருவரை முதற்கட்டமாக இன்றைய தினம் விசாரணைக்காக அனுப்பிவைக்குமாறு பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம் அறிவித்ததாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## தடம்மாறுகிறது...

கடும் கண்டனங்களை வெளியிட்டிருக்கின்றன. அத்துடன் சம்பந்தன் மீது வெறுப்புற்றிருக்கும் தமிழ் அமைப்புக்கள் எதிர்காலத்தில் புலிகள் தொடர்பாகக் கருத்துக் கூறுவதை நிறுத்தும்படியும் சம்பந்தனிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

அதேவேளை சம்பந்தனின் இந்தக் கருத்துத் தொடர்பில், தமிழ்த தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரது பேச்சு காரணமாக அவர், வெளிநாடுகளுக்கு வர இடமளிக்க போவதில்லை என புலம் பெயர் நாடுகளில் உள்ள புலிகள் சார்பான அமைப்புக்கள் தெரிவித்துள்ளதாகவும் 'திவயின' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

# உண்ணாவிரத போராட்டம் நிறைவு



(யாழ்ப்பாணம்)

கடந்த கால யுத்தத்தால் பல்வேறு இழப்புக்களையும், துயரங்களையும் சுமந்து பல்வேறு அழிவுகளைச் சந்தித்துள்ள மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுவதற்காக போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பின் தலைவர் வி. சகாதேவன் மேற்கொண்ட சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து இந்த உண்ணாவிரதப் போராட்டம் கடந்த திங்கட்கிழமை குருநகர் சவக்காலைச் சந்தியில் ஆரம்பமானது.

இலங்கை கடற்பிரதேசத்திற்குள் பிரவேசித்து எமது மீனவர்களின் வாழ்வாதாரத்திற்குச் சவால் விடும் வகையில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுபடுத்த வேண்டும்.

போரால் பாதிக்கப்பட்ட பிரதேச மீனவர்களின் சங்க நடவடிக்கைகளுக்குக் கட்டுப்படாமல் தொழிலில் ஈடுபட்டும், தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைக் கையாண்டு எமது கடல் வளத்தை அழிக்கும் மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதுடன், மீனவர்களின் வளங்களைச் சூறையாடும் வெளிப்பிரதேச மீனவர்களின் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த வேண்டும் என்ற இரு கோரிக்கைகளை முன்வைத்தே உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப் பட்டது.

# யாழ். நகர பெட்டிக்கடைகள் விரைவில் அகற்றப்படும்

## வேம்படிச் சந்தியில் புதிய கடைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். . பஸ் நிலையத்தை ஒட்டி அமைந்திருக்கும் வீதியோரக் கடைகளுக்கு வேம்படிச் சந்தியில் தனியார் காணி ஒன்றில் கடைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு வியாபாரம் செய்வதற்கு யாழ். மாநகர சபையினால் ஒழுங்குகள் செய்யப்படுவதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

இதற்கென வேம்படிச் சந்தியில் அப்பகுதிக்குள் தனியார் காணி ஒன்று வாடகைக்குப் பெறப்பட்டு அதில் யாழ். பஸ் நிலையத்தை ஒட்டியிருக்கும் வீதியோரக் கடைகளுக்கு கடைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கை முற்றுப் பெற்றதும் அங்கிருக்கும் சுமார் 96 கடைகளும் வேம்படிச் சந்திக்கு மாற்றப்படவுள்ளதாகவும் இந்த மாத இறுதிக்குள் இந்த நடவடிக்கை விரைவுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ். நகர்ப்பகுதியில் சன நெரிசலும் போக்குவரத்து நெருக்கடியும் குறித்த கடைகளால் ஏற்பட்டுவருவதனை அடுத்தே இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரியவருகின்றது.

மேலும் யாழ். முனீஸ்வரன் வீதியில் உள்ள சில அங்காடி வியாபாரிகளின் கடைகளில் குறித்த சில குறைபாடுகள் தமகக் கிடைத்திருப்பதாகவும் அதற்கான ஆதாரம் கிடைத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முதல்வர் தெரிவித்தார்.(பா)

# 13 ஆவது திருத்தத்தை அகற்ற கிழக்கில் கிளம்பும் ஆதரவு


அரசியல் அமைப்பின் 13 ஆவது அரசியல் திருத்தத்தை அகற்றுவதற்கு ஆதரவாக கிழக்கின் முஸ்லிம் கட்சிகள் சில கருத்து ஒற்றுமை கண்டுவருகின்றன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் சிலவே இவ்வாறு 13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டுமெனக் கோரியுள்ளன. அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகள் 13 ஆம் திருததச் சட்டம் இரத்து செய்யும தீர்மானத்திற்கு ஆதரவளிக்கப் போவதாக அறிவித்துள்ளன.

13 ஆம் திருத்தச் சட்டம் நீடிக்கப்படுவதனை விரும்பவில்லை என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் எல்.எஸ். மீட் தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாணத்தைத் தவிர வேறு பிரதேசங்களில் குறிப்பிடத்தக்களவு முஸ்லிம் மக்கள் செறிந்து வாழவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் மாகாணசபை முறைமையின் மூலம் போட்டியிட்டு வெற்றியீட்டி நன்மைகளை அடையக்கூடிய சாத்தியங்கள் குறைவு என அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, 13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யும் எந்தவொரு முனைப்பிற்கும் அனுமதியளிக்கப்படமாட்டாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது. 13 ஆம் திருத்தச் சட்டத்தை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என கட்சி அறிவித்துள்ளது.

# தென்மராட்சி பிரதேசத்தில் சுயதொழிலுக்கு உபகரணங்கள்



குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் திட்டமிட்ட வகையில் சுயலாப அரசியல்வாதிகளால் இருட்டடிப்பு செய்யப்பட்டு வருவதாக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) அவர்கள் குற்றம்சாட்டியுள்ளார். தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் 2012 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து சுயதொழில் மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குடாநாடு யுத்தத்தால் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் கூட கட்சித் தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் பல்வேறு அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

யுத்தம் முடிவிற்கு வந்துள்ள இன்றைய சூழலில் குடாநாட்டில் தற்போது பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன இந்நிலையில் அவ்வாறான அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக சில அரசியல்வாதிகள் திட்டமிட்ட ரீதியில் இருட்டடிப்புச் செய்வதுடன், சில குழப்பங்களையும் அரங்கேற்றி மக்களை குழப்பியும் வருகின்றனர் என்று சுட்டிக்காட்டியதுடன்,

இவ்வாறான சூழ்நிலைகளில் மக்கள் உண்மையை உணர்ந்து கொண்டும் இதுபோன்ற வாழ்வாதாரம் உள்ளிட்ட உதவித் திட்டங்களை கருத்தில் கொண்டும் செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது அழிவுயுத்தத்திற்கு காரணமானவர்களே பொய்ச்செய்திகளை வெளியிட்டு மக்களைத் தவறாக வழிநடத்தி மீண்டும் அழிவை நோக்கி இட்டுச் செல்லவே அவர்கள் விரும்புகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

தென்மராட்சி பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன் அஞ்சலிதேவி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்மு்கப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து மகளிர் சங்கங்களுக்கு சுயதொழில் உபகரணங்களும், விளையாட்டு கழகங்களுக்குரிய விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

உபகரணத்தொகுதியினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்), தென்மராட்சி பிரதேச செயலர், ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி இணை இணைப்பாளர் வலன்ரைன், ஈ.பி.டி.பி.யின் கொடிகாமம் இணைப்பாளர் விஸ்வா உள்ளிட்ட துறைசார்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலர் உடனிருந்தனர்.

# இலங்கையர் உட்பட 26 பேர் இந்தோனேசிய கடலில் கைது

(இந்தோனேசியா)

இந்தோனேசியாவிலிருந்து படகின் மூலம் அவுஸ்ரேலியாவிற்கு சட்டவிரோதமாகச் செல்ல முயன்ற இலங்கையர் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையர் ஒருவர், ஆப்கானிஸ்தானியர் 21 பேர், பாகிஸ்தானியர் 4பேர் அடங்கலாக 26 பேரும் இந்தோனேசியாவின் துமாய் ராவோ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

# கெஹலிய மீது கொலை முயற்சி இளம் பெண்ணுக்கு 20 வருட சிறை

(கொழும்பு)

தற்போதைய ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெலவைப் படுகொலை செய்வதற்கு திட்டமிட்டிருந்தார். என்ற குற்றஞ்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த பெண்ணொருவரைக குற்றவாளியாக இனங்கண்ட கேகாலை மேல் நீதிமன்றம் அப்பெண்ணுக்கு 20 வருடகால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த இராசலிங்கம் தாமரைவதனி என்ற பெண்ணுக்கே கேகாலை மேல் நீதிமன்ற நீதவான் மேனகா விஜேசூரிய மேற்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளார்.

கேகாலை பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இருந்து அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதிக்கும் 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி 6 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்திற்குள் கொலை செய்வதற்கு முயற்சித்தார் என்று அந்தபெண் மீது குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது. இதுதொடர்பிலான வழக்கு விசாரணை கேகாலை மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருந்த பெண்ணைக் குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் அவருக்கு 20 வருடசிறைத்தண்டனை விதித்து நேற்றுத் தீர்ப்பளித்தது. அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் தேசிய ஊடக மத்திய நிலையத்தின் பேச்சாளராக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சிகிச்சை முடித்து முகாம் திரும்பினர்

கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தமிழ்ப் பெண்களில் 12பேர் சிகிச்சைகளை அடுத்து இன்று மீண்டும் இராணுவ பயிற்சி முகாமுக்கு திரும்பியுள்ளனர். மேலும் இருவர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தின் தொழிற்படையில் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட தமிழ் யுவதிகளில் சிலர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு திடீர் சுகவீனமுற்ற நிலையில் இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என்று கூறிய இராணுவ பேச்சாளர், இவர்கள் எவ்வகையான நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை தெரிவிக்க மறுத்துவிட்டார்.

இருப்பினும், குறித்த பெண்கள் தங்கியுள்ள முகாமில், சம்பவ தினம் இரவு கேட்ட பயங்கரமான சத்தம் காரணமாக பயந்து உளநிலை பாதிக்கப்பட்ட நிலையிலேயே அவர்களில் 16பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் சிலர், தன்னிலை மறந்து பேசிக்கொண்டிருப்பதாகவும் மேலும் சிலர் பேச முடியாத வகையில் அதிர்ச்சி காரணமாக வாய்கள் இறுக மூடப்பட்டிருப்பதாகவும் அத்தகவல்கள் குறிப்பிட்டனர்.

இருப்பினும், இப்பெண்கள் சிறு உபாதைகளுக்கே உள்ளாகியுள்ளனர் என்று தெரிவித்த இராணுவப் பேச்சாளர், சிகிச்சை முடிந்து முகாம் திரும்பிய 12பேர், நேற்று மாலை இடம்பெற்ற பயிற்சிகளிலும் கலந்து கொண்டனர் என்று கூறினார்.

# ஒரே குடும்பத்தில் 4 பேருக்கு மரணதண்டனை

(கொழும்பு)

கொலைச் சம்பவமொன்றில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேருக்கு கேகாலை மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. கேகாலை மேல் நீதிமன்ற நீதவான் மேனகா விஜேசூரியவே நால்வருக்கும் மரணதண்டனை விதித்து நேற்று தீர்ப்பளித்துள்ளார். இந்த கொலை தொடர்பான வழக்கு கேகாலை மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சட்டவிரோத மதுபான நிலையமொன்றை முற்றுகையிட்டபோது, பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கொலை செய்யப்பட்டிருந்தார். இக் கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர் ந்த நான்கு பேருக்கே மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது

# மோசடிப்பேர்வழிகளைத் தேடி பொலிஸார் வலை வீச்சு

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களின் உறுப்பினர்களாகத் தோன்றி தங்க நகைகள் மற்றும் வாகனங்களுக்கான லொத்தர் சீட்டிழுப்புக்களில் வெற்றி பெற்றுள்ளீர்கள் எனக் கூறி பொதுமக்களிடமிருந்து நிதி வசூலிக்கும் குழுவொன்று தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.


பரிசுகளைப் பெற்றுக்கொள்வதற்காக 500 ரூபா முதல் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை கேட்டு கையடக்கத் தொலைபேசிகள் மூலம் குறுஞ்செய்திகளை அனுப்பி இந்த நிதி மோசடி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறானதொரு குறுஞ்செய்தி கிடைத்துள்ள கலேவெல பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் வங்கிக் கணக்கொன்றுக்கு ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவினை வைப்பிலிட்டுள்ளார். இந்த பணத்தை, கஹவத்தை, அடகலம்பன்ன பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் உடனடியாக வங்கியிலிருந்து மீளப் பெற்றுள்ளார் என பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், மேற்படி நிதி மோசடிக் கும்பலுக்கும் வலை விரித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## கடற்படை முகாமுக்குள் யானை அட்டகாசம்

திருகோணமலை கிழக்கு கடற்படை முகாமுக்குள் காட்டு யானையொன்று புகுந்துள்ளது. இந்த யானையைப் பிடிப்பதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடலைக் கடந்து குறித்த முகாமுக்குள் யானை புகுந்துள்ளதாகவும் இதனைப் பிடித்து காட்டுக்குள் விடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வனஜீவி பாதுகாப்பு பிரிவு அதிகாரி எம்.சுரேஸ்குமார் நேற்றுத் தெரிவித்தார்.



(நெடுந்தீவு)

யாழ். தென்மேற்கு குடாக் கடல் பிரதேசத்திற்குள் நேற்று அதிகாலை அத்துமீறி நுழைந்த இந்திய இழுவைப்படகுகள் அங்கு நெடுந்தீவு கடற்றொழிலாளர்களின் வலைகளுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்திச் சென்றுள்ளன.

இச்சம்பவத்தை அடுத்து தமது பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான மீன்பிடி வலைகள் சேதமடைந்த நிலையில், பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் இதுகுறித்து நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்ஷியனிடம் (ரஜீவ்) முறைப்பாட்டினை தெரியப்படுத்தினர். இதனை அடுத்து மேற்படி சம்பவம் தொடர்பாகவும், பாதிக்கப்பட்டோர் குறித்த தகவல்களையும் யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும் துறைசார் அதிகாரிகளினதும் கவனத்திற்கும் கொண்டுசென்ற பிரதேசசபைத் தவிசாளர் நேரடியாகவும் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்து பார்வையிட்டார்.

## நீரில் மூழ்கி சிறுவன் மரணம்

வெள்ளவத்தை 154/1 தர்மாராம வீதியில் உள்ள சுனாமியால் நிர்க்கதியான சிறுவர்களுக்கான இல்லத்தில் உள்ள சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். குறித்த சிறுவன், சிறுவர் இல்லத்திற்கு அருகில் இருந்த கால்வாயில் தவறுதலாக விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுப் பகல் 1.30 அளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தை அடுத்து கடற்படையினர் குறித்த சிறுவனின் சடலத்தை மீட்டுள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 டிசம்பர் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.